# நாடற்றவனின் குறிப்புகள்



இளங்கோ

# நாடற்றவனின் குறிப்புகள்

இளங்கோ

அம்பனா

Naadattavanin Kurippukal (Poetry Collection in Tamil)
© Elanko, First Edition: 2007
Published by Ampana
Copies available at: adaiyalam, 1205/1 Karupur Salai,
Puthanatham 621 310.Tamilnadu, India, email: ampana@yahoo.com
Printed at Mani Offset, Chennai 5.

Distributors to North America & Europe:
Elanko. M, 330 McCowan Rd, # 1306, Toronto, On, M1J 3N3, Canada
e-mail: elanko@rogers.com, Tel: +416 725862 / +416 9150316

Price:
India Rs. 60
Sri Lanka Rs. 100

அக்கா, மலர்மதிக்கு...

## நன்றி

*நான் நானாகவே இருக்க அனுமதிக்கும்*
*பெற்றோருக்கும், சகோதரர்களுக்கும்*
*பதின்மங்களில் எழுத ஊக்குவித்த*
*சங்கீதா, கௌசல்யாவுக்கும்*
*கவிதைகளைப் பிரசுரித்த*
*சஞ்சிகைகளுக்கும், இணையத்தளங்களுக்கும்*
*விமர்சனமும் உற்சாகமும் வழங்கும்*
*வலைப்பதிவு நண்பர்களுக்கும்*
*நண்பர்கள் ஆழியாள், ஆதவன் தீட்சண்யா,*
*சித்தார்த்த சே குவேரா, அடையாளம் சாதிக் மற்றும்*
*யாழினிக்கும்.*

# உள்ளே

கழியக்கூடும் காலங்கள் எப்படியேனும் 7
உன் மரணத்திற்கு முன்பும் பின்புமான சிலபொழுதுகள் 9
பேருந்து இலக்கம் 86 11
பனையும் அரச மரமும் 13
அமைதியின் மணம் 15
தேடலில்லா கவிதை போல்.... 18
அதிகாலையும் அந்திக்கருக்கலும் 20
எங்களின் கதை 23
...என்று கூறுபவர்க்கு 25
நீரும் நானும் சிலபொழுதுகளும் 26
அழிவின் தீரா நடனங்கள் 29
உதிரும் சிறகு 31
ஊடறு 33
ஏதிலிக் கனவுகள் 34
அம்மா 36
அறியாக் கணங்களின் வனப்பு 38
இருத்தல்களின் மீது கவியும் இன்மைகள் 39
பொழுதுகளை மீட்பித்தவளுக்கு 41
சித்திரா பௌர்ணமி 43
நமக்கான கடைசிப் பாடல் 45
ஒரு நாடோடியைப் போல... 47
பயணம் 49
கோடை 51
புத்தருடன் ஓர் இரவு 53
கணப்பொழுது வாழ்வு 55
மழைக்காலப் பெண் 57
உறையும் காலம் 60
ஆழப்புதையுண்ட வேர்கள் 61
ஒற்றைக்கல் மூக்குத்தி 63
குளிரோடு வந்த ஞானம் 65
இறுகிப்போன தாழிகள் 66
கரையொதுங்கும் புறாவின் சிறகுகள் 68
சிதைவு 70
இலையுதிர்காலத்துப் பிரியங்கள் 72

யசோதரா 74
எதிர் உலகம் 76
இன்னொரு போர்க்களம் 78
கனவு 80
தீர்வு 82
பொய்த்துப்போன பருவங்கள் 84
செவ்வரத்தம்பூத்தெரு 86
சிறகு 88
அலை 89
தரிசு நிலச் செடி 90
வலி 91
அகாலம் 93
கண்ணீர்த் துளி 94
அவதி 95
ஒழுங்கு 96
குதூகலம் 97
பிரார்த்தனை 98
போரின் சூத்திரங்கள் 99
நாககன்னி 101

## கழியக்கூடும் காலங்கள் எப்படியேனும்

இலக்கியம் பேச மாலையில் வருவதாய்
கூறிய பனிப்பொழுதில்
நேரந்தாழ்த்தி நிகழ்கிறது அவன் வருகை

குரூரம் வழியும் நவீனத்துவம்
எதற்கென விலக்கி
எதிரேயிருந்த இரவு விடுதியுள் நுழைகிறோம்

நள்ளிரவுக்கப்பாலும் தொடர்கிறது
மதுவும் நடனமும்

அங்காடியின்
அழுக்கு வழியும் நடைவழிப்பாதையில்
ஜாஸ் கலைஞனை
உச்சிமோர்ந்து முத்தமிடும்
சப்வே பிச்சைக்காரிமேல்
ஒன்றிப்போகிறது அவன் கவனம்

அந்தக் காட்சியை அற்புதமென வர்ணிக்கிறான்
தோழியருடன் சூழவிருந்து
பரீட்சைக்குத் தீவிரமாய் கற்கும்
ஒரு பொழுதிற்கு தொடர்பற்று

நான் இடைமறிக்கையில்
இருத்தலின் இல்லாமை குறித்துப் பேச
போதிய அவகாசமில்லை
விரிவுரைகளுக்கு ஒழுங்காய்ச்சென்று
கற்றலும் விவாதித்தலும்
வாழ்வின் அபத்தத்தினை ஆறப்போடுமென்கிறான்

இன்று
எல்லாவற்றிலும்
நியாயத்தின் திசை நிற்குமவன் நெஞ்சுறுதி
என்னுள் அச்சமூட்ட
அவனுறவைத் துண்டித்துக் காத்திருக்கின்றேன்
நள்ளிரவிற்கான கடைசி பஸ்சிற்காய்

காலம் இப்படித்தான்
நல்லவர்களை நகர்த்தி
வீணே கழியும் மௌனமாய்
நினைவுகளை மட்டும்
வழிநெடுகிலும் சிதறவிட்டு.

*(2000)*

●

## உன் மரணத்திற்கு முன்பும் பின்புமான சில பொழுதுகள்

பகிர்தலில் மனச்சுமை தீருமெனில்
உன்னையும் இழக்காது
கலங்காது
இருந்திருக்கக்கூடும் நான்

களைப்புற்று
கல்லூரி வாசலில் காத்திருந்த
இருள் கவிந்த மாலைவேளை
இன்னமும் வெளிச்சமாய் தெரிகிறது

என்னவாயிற்றென்ற
என் தொக்கு வாக்கியத்துக்கு
இலைகள் உதிர்த்தாலும்
நாளை துளிர்க்கும் நம்பிக்கையுடன்
உறங்குநிலைக்குப் போகும்
மரங்கள் அற்புதங்கள் என்றாய்

நீ எப்பவும் இப்படித்தான்
உள்மனதின் நீரோட்டம்
உன்னில் அறிவது மிகக் கடினம்

அன்றைய நாளின் இரவில்
நீயாகவே இறந்துபோனதும்
அறிய முடியாதபடி
காரணங்களைச் சிதைத்துப்போனதும்

புலரும் திசைநோக்கிப் படர்ந்த
மனதின் நீட்சியைக் காணச் சகியாது
துளிப்பொழுதில் மூர்க்கமாய்க் கசக்கியெறிந்து
கலைந்து போனவர்களை
திரை விலத்திக்காட்டி
இறந்த உன்னை
இன்னொருமுறை சிதைக்க அனுமதியேன்

இருப்பினும்
நினைவுகள் பீறிட்டெழும்
இக்கணத்தின் கொடுமையை
முகத்தில் பேயென ஓங்கியடிக்கும்
காற்றிலா கரைக்க முடியும்?

'கேட்ட கேள்விக்கு விடை இல்லாதபோது
மௌனமாயிருக்கப் பழகவும்'
சிவரமணியின் வார்த்தை
நினைவுக்கு வருகின்றது இப்போது.

*(2000)*

•

## பேருந்து இலக்கம் 86

மதியமும் இல்லாத மாலையுஞ் சேராத
அந்தகாரப் பொழுதில்
மனதிற்கு ஒப்பாகாததோர் வேலை

கடைசிநேரத்தில்
பஸ்சிற்கான ஓட்டம்
உள்ளே சந்தடியாகிப்போகும்
மொழிகளின் கடைவிரிப்பில்
தனிமையைத் தேக்கிவைக்க
சன்னலோர இருக்கைதான் வசதி

வெளியே விரியும் பார்வைக்கு
சிக்கியதோர் விடுதியில்
வழமைக்கு மாறாய்
நெற்றிநிறை திருநீற்றுடன்
வயது முதிர்ந்ததோர் தமிழ்ப் பெண்

ஒருநாள் இருநாள்
இவ்வாறு நீண்டிரு மாதங்கள்
வாரநாட்களில் அதிகங்காணும்
அம்மூதாட்டியின் அமர்வு
கடைசிக் காலத்தில் எதையும் பேசாது
நோயுற்றிருந்த அம்மம்மாவை
நினைவுபடுத்தியதெனக்கு

ஆரம்பத்தில் என்னைப் பார்த்து
தமிழனாயென
உறுதிப்படுத்தும் ஆழ்பார்வைகள்
தீர்வுக்கு வந்தவுடன்
கடைவாயில் சட்டென
மின்னலாகி மறையும் புன்னகைகள்

எதற்காய் இவருக்கு
இந்த தனிமையின் வாசம்
குறுகுறுப்பதுண்டு நெஞ்சு
பதில்களின் ஆழம் காண முடியாமல்

விடுமுறை கழிந்து
படிப்பிற்காய் தூரநகர் நோக்கி
இடம்பெயரும் இலையுதிர்காலமினி

இப்போதெல்லாம்
நீளும் அவரின் பார்வைகளில்
பஸ்சை விட்டிறங்கிவந்து
ஏதாவது பேசேன் என்கின்றதான பாவனைகள்
பேசியென்ன கிழிக்கப் போகிறேனென
உள்மனவிருத்தலின் தேடல்கள் எனக்கு

எங்கள் சொந்த மண்ணில்
எப்படியொரு வாழ்வு இருந்திருக்கக் கூடும்
இந்த வயதுபோனவர்களுக்கு.

*(2000)*

•

## பனையும் அரச மரமும்

புலம்பெயர்தலை
இன்னொருமுறை புதுப்பித்தாயிற்று
மனிதம் தேடியலையும்
கொழும்பில் தற்காலிக இருத்தல்

சூழலின் புதிதில்
எதிர்பாராது வாய்த்தது
உனது தோழமை

தாய்மொழிகள் வேறாயிருந்தாலென்ன
அரைகுறை ஆங்கிலத்தில்
அறிமுகப்படுத்தினேன் என்னை
ஏற்றுக்கொண்டதாய் சிரித்தபடி
எதிர்ப்புறத்து வீடுனது வாசமென்றாய்

என் நொய்ந்துபோன ஆங்கிலவறிவுகண்டு
கற்றுத்தர வரத் தொடங்கினாய் வீட்டிற்கு
இந்தச்சிறுக்கிக்கு இங்கென்ன வேலையென
அம்மாவின் முணுமுணுப்பையும்
இங்கிலீஷ் படித்திவர்
கிழிக்கப்போகிறாரென தங்கைகளின் கேலிகளையும்
புறந்தள்ளித் தொடர்ந்தது உன்னுடனான நட்பு

இதயங்களின் இருப்புகளின் அர்த்தம்
புரிந்துகொள்ளப்பட்டதோர் பொழுதில்
கரம் பற்றிக் காதோடு விளம்பினாய்
நேசிப்பதாய்

நாளைய இருத்தலின்
நம்பிக்கையீனங்களும்
எனக்குள்ளே புகட்டப்பட்ட
மரபுகளின் மிச்சங்களும்
பயமுறுத்தின பதிலளிக்க முடியாமல்

உனக்கும் புரிந்திருக்கக் கூடும்
புறக்காரணிகள்தான்
எம்மைப் புரியவிடாது புறந்தள்ளினவென்று
இருந்தும் நம்பிக்கை தளராது
இன்னமும் நெருக்கமானாய் என்னோடு

யார் ஆளுமை செய்வதென்ற
சூரியசந்திரர்களின் ஆணவத்தால்
நாட்கள் நகர்ந்தோட
கைகூடியது கடல்கள் கடக்கும் பயணம்

எப்போதும்போல்
எதையும் தொலைத்தாற்போல்
நடமாடும் மனிதர்கள்
முன்காலைப் பொழுதிலே
முகத்திலடிக்கும் வெயிலின் கோரம்
இவை தவிர நாங்கள் விடைபெற்றபொழுதில்
எதுவும் நடந்துவிடவில்லை இயல்பிற்கு மாறாய்

நாளைக்குப் பயணம் கனடாவிற்கெனக் கூறி
பார்வையைத் தூரத்தில் தொலைத்தபொழுதில்
நெருங்கிவந்து இதழ்பதித்தகன்றாய்

நான் நிசப்தமாயினேன்
நின்ற புள்ளியில்
நீயோ நடந்துசென்றாய்
திரும்பிப் பாராது
இனி நிலைப்பதற்கு
உறவெதுவும் இல்லாமற்போல்.

*(2000)*

•

## அமைதியின் மணம்

ஒவ்வொரு பெருந்துயர்களின் பின்னும்
நீளும் நம்பிக்கையின் துளிர்ப்பிலே
வாழ்வு பெருகும்
எமக்கு

நேற்றுப் பரவிய வெறுமை
துடைத்தெறிந்து
நாளையை மீண்டும் சுகிக்க
எங்கிருந்தோ எழும் மிடுக்கு

மகிழ்வின் சாயல் கலந்துருகிய அக்கணத்தில்
புத்தரையும் காந்தியையும் குழைத்துப் பூசியபடி
அந்நியமான சிலர்
எங்கள் தேசத்தில் பரவினர்
எந்தக் கேள்விகளுமில்லாது

சிரித்தபடி வந்தவர்கள்
முகங்கள் இறுகியபடி
முள்ளுக்கம்பிகளுக்குள் புதைந்ததற்கு
காலம்மாறி வீசிய
அமைதியின் புயலும் காரணமெனலாம்

பிறகு
எண்ணெய் மணமும்
அணிவகுப்புத் தடமும்
கலந்து பெருக
பீதியில் உறைந்தன
தெருக்கள்

பொழுதெல்லாம் விழிமூடாது
ஊர்களின் அமைதிக்காய்
ஒற்றைக்கால் தவமியற்றியவர்கள்
அதிகாலையில் மட்டும்
துயின்றுபோகும் அதிசயம்
உருக்குலைந்த உடல்கள்
பனிப்புகாரில் மிதக்கையில் மட்டுமே
நிகழ்ந்தன

சாரமும்
கைகள் பின்னே வளைக்கப்பட்டிருக்கும் கோலமும்
விழிகள் வெறித்தபடியிருக்கும் கோரமும்
அரணுக்குள்ளிருப்பவர்கள்
அழிவுகளில்லாது திரும்பிச் செல்லல் கூடாதென
நெஞ்சு விம்மித் தணியும்

எதிர்வீட்டு அக்காவின்
ஆடைக்குள் குண்டிருப்பதாய்
எச்சில் தெறிக்கும் பரிகசிப்புடன்
அமைதியானவர்கள் முலைகள் திருகி
கூட்டாய்ப் படர்கையில்
அசையாய்ச் சாட்சிகளாவது
நானும் மதியவெயிலும்

நிகழ்வுகளின் தொடர்ச்சியில்
ஆழ்மனதின் துலங்கல்கள் சிதைவுற
மழலையாகிச் சிரித்தபடி
காணாமற்போனாள் அக்கா
ஓர் நாள்

இப்போது புலம்பெயர் வாழ்வு.

நினைவுகளின் செட்டையைக் கழற்றிவிட்டு
இறகுகளின் மிருதுவானப் போர்வைக்குள்
நடுநடுங்கியபடி விரகமெழும்
உறைபனிக் காலம்

நேற்று நடந்தவையெதுவும்
என்னைப் பாதிக்காதெனும் திமிருடன்
கொஞ்சம் கொச்சைத் தமிழும்
அதிகம் ஆங்கிலமும்

நாவில் சுழலும் அன்புத் தோழியுடன்
மரபுகளைச் சிதைத்தபடி
கலவியும் கிறங்கலுமாய்
கழிகிறது வாழ்வு

எனினும்....

அவள் முலைகள் சுவைத்து
முயங்கும் பொழுதெல்லாம்
எண்ணெய் பிசுபிசுக்கும்
அமைதியின் மணமும்
குறியென விறைத்து நிற்கும்
துப்பாக்கிமுனையின் நினைவும்
ஏனோ பீறிட்டெழுகிறது
எல்லாவற்றையும் புறக்கணித்து.

*(2001)*

•

## தேடலில்லா கவிதை போல....

*காலந்தவறி அசைந்தாடி வரும்*
**ஓசி பஸ்சும்*
*சளைக்காது மூசிவீசும் குளிர்க் காற்றும்*
*நெஞ்சினிலுள் இறங்கும் கோபக் கவளங்களாய்*

*வெறுப்பும் சலிப்பும்*
*குழைத்தெறியும் பொழுதில்*
*என்றேனும் ஒருகால்*
*உருகாதோ உறைபனி*

*மதுவருந்தி மயங்கும் வெள்ளியிரவுகளில்*
*பலவீனங்களுடன்*
*மனிதர்களை நேசிக்க நெஞ்சு கிஞ்சிக்கும்*

*பாடப் புத்தகங்களைப் புரட்டவே*
*அலுப்புறும் நான்*
*மாந்தர்களைப் படித்தல் நடவாதென*
*நினைவு ததும்பிச் சிரிக்கும்*

*வகுப்புகளுக்காய்*
*சுரங்கப் பாதையில் நடக்கையில்*
*தென்படும் பெண்களெல்லாம்*
*தேவதைகளாக மிதக்கின்றனர்*

*அறிவும் தெளிவும்*
*பேச்சில் தெறித்துச் சிதறினும்*
*ஆண்களின் வாதை*
*நீள்விழிகளில் கனக்கின்றன*

முற்போக்குகளின் பிரதிநிதியாய்
சமரசங்களற்று அலையும் இளைஞன்
பட்டத்துடன் முகவரியற்றுப் போவது
நாளைய விந்தை

அவ்வப்போது கற்றல்
வன்முறையாய்
சிந்தனையடுக்குகளைச் சிதைத்துப்போக
நெருங்குகிறது பரீட்சை

தேடலில்லாக்கவிதை போல
காலத்தை அசட்டை செய்து நகர்கிறது
வாழ்வு.

*(2001)*

•

★ Ottawa-Carleton (OC) Transportation

## அதிகாலையும் அந்திக்கருக்கலும்

சுயத்தை விழுங்கி
ஏப்பமிடப்போகும்
பரீட்சையொன்றின் அதிர்வுடனோ
அல்லது
நள்ளிரவில் வகையின்றியருந்திய
மதுவின் எஞ்சிய கசப்புடனோ
காலைப் பயணம் விரிவுகொள்ளும்

வானிலிருந்து கீழிறங்கும் பனியும்
துளிகளின் மென்மையுடன்
புற்களுடன் புணர்வதில்லை
திட்டுத் திட்டாகவே
தரையினில் மிதக்கின்றன
புலம்பெயர்ந்த அகதியின்
இறுகிய இதயத்தைப் பிரதியெடுத்தாற்போல்

இரவில் உதிரும்
நட்சத்திரங்களிடையே
மழலையாக மாறி
பால்வீதியில் சுழன்றாடும்
ஒளியாண்டு வாழ்வு குறித்த இலயிப்பில்
விரிவுரைகள் தினம் விரைவுபெறும்

மதியவுணவுடன்
நதியின் மொழியுடன்
தொடர்புகொள்ளும் மௌன சமிக்ஞைகளை
எவரோ வந்து கலைத்தபடியிருக்கின்றனர்
ஒவ்வொரு முறையும்

வசந்த காலங்களில்
தோழியொருத்தியின் கைகளைக் கோர்த்தபடி
நதியோரமாய் நடக்கும்
நிர்மலமான ஆசைகள்
இலைகள் உதிரும்வரை நிறைவேறியதில்லை

உறைந்துபோன நதியின் மறைவிடங்களில்
இருளப்பிய காரின் கண்ணாடிகளுக்குள்
என்னையும் அவளையும் அறியும் முயற்சிகள்
உணர்வுகள் அரிதாரமின்றியுருகும்
குளிர்காலத்துப்பொழுதுகளில் மட்டுமே
நிகழ்கின்றன

எப்போதாவது
மையங்கொள்ளும் ஒன்றுகூடல்களில்
அனைத்தும் மீறி
நவீனத்துவப் பெண்ணே
வார்த்தைகளால் துகிலுரியப்படுவாள்
ஆண்களின் கனத்துப்போன குரல்களின் பெருக்கத்தால்

மூர்க்கமாய்
குதறிக் கிழிக்கும் நாய்களிடையே
இணைய விரும்பும்
என் நூற்றாண்டுகால தொன்மத்தை
நேற்றுக் கிறங்கிய விழிகளிலிருந்து
விரியும் நெருப்புப் பார்வைகள்
உண்மையின் ஆழத்தினுள்
புதைத்துக் கொல்லும்

தாங்கள்
வந்ததற்கான அடையாளங்களாய்
இருக்கைகளில்
நிரப்ப முடியாத மௌனத்தை
வீசிச்செல்கின்றனர்
நவீன பாஞ்சாலிகள்

அதில்
நாளையமரும் தங்கள் குழந்தைகள்
கிளர்ந்தெழுவதற்கான
சின்ன உரசல்களை
அந்த சப்தமின்மைகள் உருவாக்கலாம்
என்கின்றதான கனவின் மீதியை
மட்டும் காவியபடி
கலைகின்றனர்
ஒவ்வொருபொழுதிலும்.

*(2001)*

•

## எங்களின் கதை

சந்திப்புகள்
அசாதாரணமாய் சம்பவிப்பவை

வெயிலின் கொடுமைதாளாது
ஆற்றில் கைகள் அளைந்து
என் விம்பந்தேடி
வெறுமை பெருகியவேளையில்தான்
நிகழ்ந்தது நினது நதியுலா

கோடை முறைத்து
மரங்கள் மௌனங்காத்தபொழுதில்
படிக்கும் பாடங்கள் குறித்து
நீ சல்லாபிக்காதிருந்தது
நீர்வீழ்ச்சியானது மனதிற்கு

எதிர்கால இலக்குகள் குறித்தும்
ஆச்சரியமாய் இலக்கியம் சார்ந்தும் பேசினோம்
இலத்திரனியல் கற்று
சடப்பொருளாகிய நாங்கள்

பின்
உனக்கொரு தாய்மொழியில்லா
காலத்தின் கொடுமையினை
மூதாதையர் வேர்கள் தேடி
கயானா செல்லல் சாத்தியமற்றதை
பதிவு செய்தாய் உடைந்த குரலில்

சந்திப்புகள் நீண்டன
புரிதலும்தான்.

எல்லாவற்றையும் இழந்துவந்த
ஏதிலியென்ற புனைவுதான்
எமை இணைந்திருக்கக்கூடும்
வாழ்வுப் புள்ளியில்

*தொலைதூர கிராமமொன்றில்*
*காம்பிங்கில்*
*குடித்துக்கிறங்கி*
*உனையணைத்த பின்னிராவேளையில்*
*விளம்பினாய்*
*நாமிணைந்து வாழும் விருப்பினை*

*நேற்றினைப்போல்*
*கற்றல்*
*வன்முறையாய்*
*கரைதாண்ட முடியாக் கடலாய்*
*கனவுகளில் பயமுறுத்துவதில்லை*
*உன் விரல்கள் பின்னி நடனமிடும்*
*இந்த இரவுகளில்.*

***(2001)***

•

## ...என்று கூறுபவர்க்கு

பெண்கள் இப்படி இருத்தல் தவறென
எழுதியபடி பேசியபடி
அப்படியிருப்பதையே இரசிக்கவும் செய்யும் மனது
ஆண்களுக்கு

அவர்களில் ஒருவனாய்
நேற்றும்
நீயில்லாத நாளையிலும்
நானிருத்தல் கூடும்

வயதும் உணர்வும்
எற்றுண்ட பிரகாசிப்பில்
உதடுகள் குவிந்து
விரல்கள் உருக
கலைந்தது சென்ற கோடை விடுமுறை

உடல்கள் உராய்ந்து
ஆசைத்தீ கனன்றெரிந்த
மாலைப்பொழுதொன்றின் பிற்பாடு
விலத்தல் வலுக்கொண்டிருக்கலாம்
இனி மறைப்பதற்கோ ஆராய்வதற்கோ
எதுவுமில்லையெனத் தெளிந்து

வாழ்வின் சலனங்களை
அளவோடு அனுபவிக்கவும்
பிரியப்படாததைத் தவிர்க்கவும்
கற்றுக்கொண்டாயிற்று உன்னிடமிருந்து

இனியென்ன
எதிரெதிர்த் திசைகளில் எம் பயணமும்
தற்செயலாய்ச் சந்திக்கையில்
சின்னதாய்ச் சிரிப்பும்

இவைபோதும் எனக்கும்
உனக்கும்.

*(2001)*

•

## நீரும் நானும் சிலபொழுதுகளும்

*1.*
*தண்ணீரில் தத்து மூன்றாம்*
*தத்துக் கடந்தால்*
*வாழ்வு*
*நீரில் சுபமென்பாள் அம்மா அடிக்கடி*

*நீரைக் கண்டு*
*மனம் துள்ளி மழலையானபோதும்*
*பயம்மறந்து நீராடியதில்லை*
*ஒருபோதும்*

*2.*
*கீரிமலைக் கேணியில்*
*பாசி வழுக்கி மூழ்கி*
*அதிசயமான தப்பிப் பிழைத்தலின்பின்*
*வீட்டில் விடுவதில்லை*
*தனியே நீராட*

*பள்ளிச் சிறையுடையும் மதியவேளையில்*
*வெள்ளைப்புறாவாகிப் புழுதியில் புரண்டபின்*
*நனைவது*
*துலாவில்லாத*
*சிதைந்த பொதுக்கிணற்றில்*

*அப்பாவின் அப்பா கோபத்தில் தற்கொலைத்த*
*அங்கேதான்*
*என்றோவோர் நாள் தவறிவீழ்ந்து*
*என் வாழ்வு முடியப் போகிறதென்று*
*நினைத்தபொழுதில்*
*ஆயுள் அதிகமெனத் துரத்தியது போர்*

*3.*
*சாவின் அரக்கனிலிருந்து*
*தப்பினேனென்ற பெருமூச்சு*
*எல்லை கடந்த கிளாலியில்*
*வடிந்துபோயிற்று*

மழை சோவெனப் பெய்த இரவில்
மீண்டும் களைகட்டியது
முடங்கிப்போன தொய்வு

இருளைக் கிழித்தபடி படகுப் பயணம்
ஒற்றை எஞ்சினுடன்
பதினொரு படகுகளின் சவாரி

இடிமுழக்கமா
சிங்கள இராணுவத்தின் பகைமுழக்கமா
பிரித்தறிய முடியா பேய்மழை
படகின் ஓரங்களில் இருந்தவரையும் அசட்டைசெய்து
நிரம்புகிறது நீர் படகிற்குள்

மரணத்திற்கு அஞ்சா வீரர்கள் ஒருபுறம்
நீரினுள் வாழ்வு சுவைக்கும் மீனவர்கள் மறுபுறம்
மரணபயம்
நெஞ்சின் ஒவ்வொரு துளையிடுக்குள்ளும்

களிப்புற்று கடல்மண்ணள்ளி
கைகளுக்குள் நிரப்பினேன்
இனி தாய்த்தேசம் மீளுதல் நடவாதெனும்
சோகத்தைக் கடலினுள் கரைத்துவிட்டு

தத்து இரண்டு கடந்தாயிற்று.

4.

சமுத்திரமிரண்டு தாண்டி
ஒன்ராரியோ ஏரிக்கரையோரம் குடியிருப்பு

வெயில் வெஞ்சினமூட்டியவோர்
பகற்பொழுதில்
நண்பர்களாய் இரவல்பெற்று
ஆழ்கடல் தேடி
மாறிமாறி வலிக்கும் *கானாய் சவாரி

பயணத்தின் இடைநடுவில்
தோழனொருவன் கேட்டான்
எத்தனை தத்து
உனக்கு முடிந்தது

சனியனே
அதை ஞாபகப்படுத்தாதே
தத்தொன்று இன்னும் மீதமிருக்கு

சிரிப்பு தவழ்ந்தது
அனைவர் முகத்திலும்
கண்கள் பேசின
என்னைப் புறக்கணித்தோர் பாஷை

என்னவென்று எடைபோட்டு
வேண்டாமென குரலெழுப்பமுன்னரே
இளமையின் குதூகலிப்பில்
குப்புறப்படுத்தது படகு

நீந்தத் தெரியாது தத்தளித்தவென்னை
கரையிழுத்து வந்த நண்பன் சொன்னான்
விசரா!
நீந்தத் தெரிந்தவனுக்குத்தான் தத்து மூன்று
உனக்குண்டு பலநூறு

5.
உண்மைதான்.

நீந்தத் தெரியாமாதிரி
பரமவைரியெனக் கற்பிதங்கொண்டவனை
பயமின்றி குறிபார்த்துச் சுடவுந் தெரியாது

இல்லாவிட்டால்
கோப்பிக் கடைகளில்
தொடர்மாடிக் கட்டடங்களில் நிற்பவனெல்லாம்
எதிர்க்குழுவினனேயென மதம் பிடித்தலைந்து...

கொல்லாமலிருந்திருப்பேன்
இந்த அப்பாவிகளை.

*(2001)*

●

★ துடுப்புக்களால் வலிக்கும் ஒருவகைப் படகு

# அழிவின் தீரா நடனங்கள்

உலகெங்கிலும்
போரிலிறக்கும் சிறார்களை நினைவுகூர்ந்து
கருத்துகள் பரிமாற
வாருங்கள் தோழர்களேயென
வளாகத்துச் சுவர்கள் அழைப்பு விடுத்தன

தீவிரவாதிகளென முகத்திலறைந்து
புதிய நாமம் சூட்டப்பட்டவர்களும்
வன்முறை முகமூடியிடப்பட்ட என்னைப் போன்றவர்களும்
உலகமயமாதலிற்கெதிராய் உரத்துக் குரல் கொடுத்த
தோழர்கள் சிலருமாய்
நிறங்களை
கலாசாரக் கூறுகளை
மீறியவோர் புள்ளியில்
மனந்திறந்து பேசக்கூடினோம்

கருத்துகள்
காந்தப்புலமாகி திசைகளெட்டுமலைந்து
தீவிரவாதமெனும் புள்ளியில் நிலைத்தது

வந்திருந்த வெள்ளைத்தோழர்கள்
இனத்துவேஷம் பொங்கிப் பிரவாகரிக்கும்
*நாஷனல்போஸ்ட்டுகளில் எழுதிக்குவிக்கும்
அறிவுஜீவிகளின் வழித்தோன்றல்களல்ல

அமெரிக்காவிற்கு
இன்னும் வேண்டுமென
ஆத்திரத்தின் உச்சியில் நின்ற
பாலஸ்தீனிய தோழனைக் கண்டு
கோபம்மிகுந்து வெளிநடப்புச் செய்தாரில்லை

வலிகளிருப்பினும்
அநியாயமாய் இறந்தவுயிர்களுக்கு
மதிப்பளித்தலும்
சாலவும் சிறந்ததென்றனர்

அழிவுகளிலிருந்து
எதை நோக்கிய தேடலுள்ளதென
வினாவிய தோழிக்கு
அரங்கம் நிரம்பிய நிசப்தமே
விடையாக வழிந்தது

எதுவுமே செய்ய இயலாதவர்களாயிருப்பினும்
கேள்விகள் எழுப்பி
பொதுவான தளத்தில்
கருத்துகள் பரிமாறுபவர்களாய்
இருப்பது குறித்த களிப்புடன்
பிரிந்தோம் நாம்

2.
இன்றையபொழுதில்
ஒரு போரிலிருந்து
இன்னொரு போரைத் தொடக்குதல் குறித்து
எல்லாத் திசைகளிலிருந்தும்
ஆர்ப்பரித்துப் பேசுகிறார்கள்

ஒரு மனிதனை
சிதைக்காமல் தடுக்கும்
மிக எளிய சமன்பாடுகள்
ஒவ்வொரு அழிவின்
தீராநடனங்களிடையே
சுடர்விட்டொளிர்வதை
நிசப்போரின் கொடூரமறியாக்கண்கள்
கவனிப்பதேயில்லை.

*(2001 - after 9/11)*

•

★கனடிய நாளிதழ்

## உதிரும் சிறகு

சடசடத்தோடும்
இரயில்களின் இடைவெளியில்
பூக்களின் தோழமையுடன் நிகழ்கிறது
நமது முதல் சந்திப்பு

பேசுவதற்கான வார்த்தைகள்
திசைகளைத் துழாவும்
விழிகளிற் புதைய
நமக்கான வெளிகளில் மட்டும்
நிரம்புகிறது நிசப்தம்

இணையத்தின்
இருப்பை வியந்தபடி
நேசத்தின் முதல் தளிர்
தண்டவாளத்தருகில் துளிர்க்கிறது
காலத்தின் அடுக்குகளைப் பிளந்தபடி

மழைக்கால இரவில்
ஒளியின் அரூப நடனத்துடன்
பயங்களற்றுப் பயணிக்கின்றோம்
திசைகள் தெரியாப்
புராதனத் தெருக்களில்

புலம்பெயர்கையில்
ஓலமிட்டுப் பிளிறிய
ஆன்மாவின் அழுகுரல்
இனியேனும் சற்று அதிராதிருத்தல் கூடும்
உனையிறுகவணைக்கும்
இந்தக்கணத்திலேனும்

தாய்மொழியின் சுவையறியாது
சபிக்கப்பட்ட வாழ்வின் மீதியை

துயரங்கள் சிதைக்க
விழித்தெழும் நீண்ட இரவுகளை
பகிர்வதற்கான நம்பிக்கைகள்
உதடுகள் நனைய
கிறங்கிப்போகும் உன் விழிகளில்
மின்னலாய் வெட்டுகிறது

நீளும்
இத்தொலைதூரப் பேருந்துப்பயணத்தில்
உனது விழிநீரும் வியர்வையும் கலக்க
பிரிவுத்துயர் தாங்கிய ஆடையிலிருந்து
இதமாய் விரிகிறது
நமக்கான முதற்கவிதை.

*(2002)*

●

## ஊடறு

நினைவுகள்
பனிப்பாளமாய் இறுகிக்கிடக்க
உடைத்துருக்கும்
வழிதெரியாது
துயருறும் நெஞ்சம்

எனக்காய் நீ
காத்திருக்கையில்
உனக்குச் சிநேகமாகிப்போன
சப்வே இருக்கையில்
இன்றும் அமர்ந்திருக்கிறாள்
ஒரு பெண்
எதன் வரவையோ எதிர்பார்த்து

சிலவேளைகளில் தோன்றுவதுண்டு
சிறகுகளை மட்டுமல்லாது
ஒரு சிறு கத்தியையும்
நமக்கென நேசமாய் விரிந்த பொழுதுகளில்
பத்திரப்படுத்தியிருக்கலாம்
என்று.

*(2002)*

•

## ஏதிலிக் கனவுகள்

இருளை வாரியிறைக்கும் அறையினுள்
நினைவுகளைப் புசித்து
அவள் மடியில் படுத்துறங்கிய காலத்தை
மீளக்கொணர முடியாத் துயருடன்
முடிவற்று நீள்கிறது பொழுது

யன்னலோரத்தில்
நேசம் நிரம்பி வழிந்தபொழுதில்
தந்திட்ட ஐந்தூரியச்செடி
இரையைக் கவ்வத்துடிக்கும்
மரநாயொன்றின் வன்மத்துடன்
அசையாதென்னைக் கவனிக்கிறது

வாசமில்லா அதன் அரும்புகள் முகிழ்கையில்
எப்படியோ என்னில் பரவிவிடுகிறது
சிறுமுலைகளின் வாசம்

நாளொன்றை மினக்கெடுத்தி
தேடித்தேடியெடுத்து
எரித்தாயிற்று
எல்லா அடையாளங்களையும்

ஒவ்வோர் தழுவலின் சிலிர்ப்பிலும்
என்னுயிரின் கருந்துளையை
நினைவுபடுத்துபவள் இடதுபுற
முலையின் மச்சத்தையும்...

*சந்திப்புகளின் முடிவுப்புள்ளிகளில்*
*காததூரம் சென்று*
*தற்செயலான நிகழ்வெனப்போல*
*திரும்பி*
*கையசைத்துப் புன்னகையில்*
*நேசத்தை அனுப்பும் கணங்களையும்...*

*எந்தப்பெருநெருப்பில் போட்டெரித்து*
*அவளில்லாத*
*என்னை மட்டும் மீட்டெடுப்பது?*

***(2002)***

•

## அம்மா

நிலவினொளியில்
பிசாசுகளாய் நிழல்கள் விரட்ட
உன் முதுகின் மறைப்பில்
சுருண்டு படுத்தபடி
நெடுமிரவுகளைக் கடந்திருக்கின்றேன்
சிறுவயதில்

பிள்ளைகள்
வளர்ந்தபின் விலகிப்போகும்
சூட்சுமம் விளங்காமல்
பெற்றவள் கலங்கித் தவிக்க
விடலைகளோ தம்பருவத்து அணங்குகளின்
விழியசைவில் காலம் நகர்வதாய்
பின் தொடர்கின்றனர்

நமக்கான உலகங்கள்
சமாந்தரமானபோது
முகத்திற்கு நேரே
விடயங்களைப் பகிரும் எல்லைகளையும்
கடந்து வந்திருந்தோம்

உனது கணவனால்
பெற்ற ஆண்மக்களால் அடையும்
வார்த்தைகளின் வன்முறையை
என்றேனுமொரு நாள்
நீ வாய்திறந்து பேசக்கூடும்

ஒரு மழைக்காலத்தில்
ஒற்றை வயலின் தந்தியின் சுருதியில்
ஆதிமொழியில்
உனக்கான பாடலை
நீ பெருங்குரலெடுத்துப் பாடுகையில்

பிணியாய்ப் பின் தொடரும்
என் காதலின்
கொடும் நினைவுகள் கலைந்து
மாறிவிடக் கூடும் நான்;
ஈழத்து ஒழுங்கைகளில்
பின்மாலைப் பொழுதுகளில்
உன் கரங்கள் கோர்த்தபடி
குதூகலமாய் நடந்தவொரு சிறுவனாய்.

*(2005)*

•

## அறியாக் கணங்களின் வனப்பு

நள்ளிரவை
குழந்தையாய் ஆராதிப்பவனுக்கு
விடியலில் துயிலெழல்
ஆலகால விஷந்தான்

இருளும் குளிரும்
தம்முள் விஞ்சியவர்
யாரென்ற நிகழ்த்திக் காட்டலில்
அதிகாலையில் விழிபிதுங்கி நிற்கும்
அப்பாவிகளில் நானுமொருவன்

எல்லா வெறுமைகளையும்
தடயங்களின்றி அழித்துவிடும்
ஒரு பெண்ணின் வருகை

பளிச்சிடும் புன்னகையாலும்
கருணை ததும்பும் பார்வைகளாலும்
காலைகள்
இதமான தூக்கத்தைப் போலாகின்றன

நீ
யாரேனும் ஒருவனின்
காதலியாக
அல்லது
குழந்தையொன்றின் தாயாக
இருக்கவும் கூடும்

நெஞ்சம் சிலிர்த்தபடியிருக்கும்
என்னை
போதையைப்போல மிதந்துகொண்டிருக்கும்
இந்தப் பொழுதுகளை
தயவுசெய்து கலைத்துவிடாதே
உன் இதழ்
பிரித்து
ஒரு மொழிபேசி.

*(2005)*

•

## இருத்தல்களின் மீது கவியும் இன்மைகள்

*செம்மஞ்சளாய்*
*இலைகள் உதிர்ந்துகொண்டிருந்த பருவத்தில்*
*முன்பொரு முறையும் சென்றிராத*
*சிறுதீவுக்குப் பயணித்திருந்தேன்*

*ஒரு மதுபான விடுதியின்*
*இருட்டுமூலையில்*
*என் கோப்பையை நிறைக்கும்*
*மதுவினைப்போல்*
*பரவியிருந்தது வெறுமை*

*அந்நியமான சூழலின்*
*தோலின் நிறத்தை நிராகரித்து*
*மொட்டவிழ்க்கும் தோழமை*
*அழகு நிறைந்தது*

*இப்போது*
*நமது உதடுகளில்*
*நுரைத்துத் ததும்புகின்றன*
*வார்த்தைகளும் மதுவும்*

*திடீரென*
*நடன அரங்கிற்கு இழுத்துச்சென்று*
*ஆட்டத்தின் எந்தவிதியும் அறியாவென்னை*
soca *நடனம் இணைந்தாடச் சொல்கின்றாய்*

*மதுவும் இசையும்*
*நரம்புகளைத் துளைக்க*
*தளும்பாதிருப்பவர் அறிவுஜீவிகள்*
*நான் உன் பிரியத்திற்குரியவன்;*
*ஆடுகின்றேன்.*

வாரமொன்று கழிந்து
புறப்படுகையில்
பேருந்து யன்னலில்
அலைந்து திரிந்த தேக்கமிலை
காலம் முழுவதற்குமான
நமது பிரிவுத் துயரை
காவிச்செல்கின்றது

இந்நள்ளிரவில்
நீ சமைத்துப் பரிமாறிய
உன் கலாசாரத்துக் கார உணவும்
soca நடன அசைவுகளும்
ஒரு கடிகாரத்தின் முட்சப்தத்தைவிடவும்
அதிகம் தொந்தரவு செய்கின்றன

நீயும் எழுதக் கூடும்
தென்னை சூழ்ந்த கடற்கரையில்
ஊரின் ஞாபகம் வந்து
விழிகளிரண்டில் ஈரஞ்சுமந்த
ஒரு நாடற்றவனின் குறிப்பினை.

*(2005)*

•

## பொழுதுகளை மீட்பித்தவளுக்கு

தெரியவில்லை
நிகழ்தகவின் எந்தப் பின்னத்தில்
இது நிகழ்வதற்கான
சாத்தியம் மறைந்திருந்ததென

பதின்மம் முடிந்த விளிம்பில்
விரிந்த காதல் பசுமை
பாலைவனமாய் நீட்சியுற
துயரத்தின் கசப்பை
நாவில் சுமந்தபடி
அலைந்திருக்கின்றேன்
காலத்தின் ஓரங்களில்

சில விடயங்கள்
தர்க்கம் தந்திரம் எதுவுமில்லாமல்
மனதுக்குள் நுழைந்துவிடுகின்றன
மிக இயல்பாய்
அப்படித்தான் நீயும்

தனித்து வாழ்தலில்
உருசி கண்டவன்
அவ்வளவு இலகுவில்
எதிலும் அடைக்கலமாவதில்லை
பொறிவைத்து
ஒருத்தரையொருத்தர் வீழ்த்த
காதல் கண்ணியுமல்ல

நான் இரசித்த
பெண்களின் குறும்பும்
அக்காவின் ஆளுமைச் சாயலும்
உன்னில் மிளிர
நெருக்கம் இன்னும் கூடும்

சென்ற முறை
period timeல்
நெஞ்சில் தலைசாய்த்து
கூந்தல் கோதிய முன்னிராப்பொழுதில்
வினாவுகிறாய்....
'இப்படிப் பரிவோடு பிறகும் நீ இருப்பாயா?'

உதிரப்பெருக்கையும் நாரிநோவையும்
புறக்கணித்து
குழந்தையின் குதூகலத்துடன் உரையாடி
தூரத்தில் மினுங்கும் தாரகைகளுக்கும்
புது வனப்பைத் தருபவளே...

என்றைக்குமான பொழுதுக்கும்
இப்படி இருப்பேன் போலத்தான்
தோன்றுகின்றது

மேலும்
இதற்குக் காதலனென்ற
அடையாளமும் அவசியமில்லை
அருகில் அமர்ந்திருப்பவளுக்கு
என்னைப் போலவே துடிக்கும்
சிறு இதயம் இருக்கின்றதென்ற
புரிதலே போதும்.

*(2005)*

•

## சித்திரா பௌர்ணமி

ஒரு மணிவரை பகல் தூக்கம்.
பலவருடத் தோழியொருத்தியின் திருமணச் செய்தி.
அனைத்தையும் பகிரும்
இன்னொரு நண்பியுடன்
முடிவுறாத தொலைபேசி விவாதம்

அருமையான நாள்
இந்தப் பொழுதைக் கொண்டாடவேண்டும்.

சிணுங்கிக் கொண்டிருக்கும் மழையையும்
பொருட்படுத்தாது
நீள்பெருந்தெருவின் நிசப்தத்தை இரசிக்க
நள்ளிரவு தாண்டிய பொழுதில்
புறப்படுகின்றேன்
காரில்

பரிட்சயமில்லாத் தெருவில்
காரை நிறுத்தி
ஒளியை அணைத்து
இதமாய் இசையைத் தவழவிடுகையில்
வந்துவிடுகின்றது மனதிற்கு
அமைதியும் வனப்பும்

இன்று சித்திரா பௌர்ணமி
ஊர் வைரவர் கோயில்
ஞாபகம்தான் வருகின்றது
வழமைக்கு மாறாய்
விழித்திருந்த அம்மா
இப்படிச் சொல்லிருக்கக்கூடாது
வீட்டின் கதவை நான் திறக்கையில்.

தனித்திருந்த அம்மாவையும்
அருகிலமர்த்தி என்னோடு
காரில் கூட்டிச் சென்றிருக்கலாம்

பாவங்கள் பெருகிக்கொண்டேயிருக்கின்றன
பெரு இரைச்சல் கொள்ளும்
இந்தக் கணத்து மழையைப் போலவே.

*(2005)*

●

## நமக்கான கடைசிப் பாடல்

காத்திருந்தேன்
முதுகில் குத்தப்பட்ட
கத்தியின் துரோகத்துடன்
ஒரு தொலைபேசி அழைப்புக்காய்

புறக்கணிப்பின் துயருடன்
வளாக வாசல்களில் நூலகங்களில்
உன் சுவடுகள் தேடியலைய
ஓயாதெழும் அலைகளாய்
காதினை உரசுகின்றன
நமது உரையாடல்கள்

இருள்படர்ந்த
நெடும்வனத்தைக் கடந்துவந்தபோது
நினைவுகள் கொல்லும் குளிர்காலம் கரைந்து
அழகாய் விரிந்திருந்தது வசந்தம்

இன்றென் செல்லிடப்பேசி உயிர்ப்புறுகிறது
அந்த இனிமைக் குரலுக்குரிய
அதிர்வெண் மாறவில்லை
எதிர்முனையில் நீ

எல்லாமே சுழற்சிதான்
நிராகரித்தலும் உச்சிமுகர்தலும்
நேசிப்பின் எழுதப்படாத விதி
உறைந்துபோன இருவிதயங்களுக்கு
உயிர்கொடுக்க முயல்கிறாய்

எதையும் நம்பும்
உதாசீனத்தை இரசித்து
அனைத்தையும் நேசிக்கும்
குழந்தைமையை தொலைத்துவிட்டிருந்தேன்
அடர்வனம் கடந்த பொழுதில்

இன்று
துரோகத்தை அருந்தி
வன்மத்தை மூச்சாக்கி
மூர்க்கமாய் வளர்ந்த 'ஆண்பிள்ளை'

இனிமேலும் நேசிக்கக் கூடும்
ஆனால் அது நீயல்ல
பதின்மம் கடந்த ஆண்கள்
மீண்டும் மழலைகள் ஆவதில்லை.

*(2005)*

•

## ஒரு நாடோடியைப் போல...

*எனக்கான*
*எல்லாப் பாடல்களும் தீர்ந்துவிட்டன*
*சிலிர்ப்பூட்டும் இசைக் கோர்வைகளற்று*

*முதலாம் பக்கம் விரிக்குமுன்னரே*
*முடிவை வாசித்துவிடும்*
*வாசிப்பனுபவமாய் அலுப்புடன் படபடக்கின்றன*
*வாழ்வின் பக்கங்கள்*

*எல்லை கடந்த கடல் நீரேரியில்*
*மண்ணைப் பிரிந்துவிடா வைராக்கியத்துடன்*
*இறுகப் பற்றிய மண்ணின் மணம்*
*கரைந்து*
*மறுகரத்தில் அகப்படாது வழிந்தோடிய*
*நீரைப்போல ஆயிற்று*
*இன்று;*
*ஊரின் நினைவுகள்*

*'யாதும் ஊரே யாவரும் கேளிர்'*
*எனும் ஒற்றைப்பாடலில் உயிர்த்திருக்கும் கணியனுக்கு*
*எப்போது திரும்பினாலும் காத்திருக்கும்*
*ஓர் ஊர் வாய்த்திருக்கலாம்*

*பிரியமுற்று*
*காதல் சொல்லத் தயங்கிய*
*இந்தப் பெண்ணின் விழிகள் பார்த்து*
*விடைபெறல் இயலாது*

அன்பைத் தவிர
எதையும் பிரதிபலிக்கத் தெரியாத அம்மாவுக்கு
எழுப்ப எழுப்ப
நத்தையைப் போலச் சுருண்டுகிடக்கும் போர்வை
ஞாபகப்படுத்தக் கூடும்
எனது இல்லாமையை

தடயங்களின்றி
இந்த ஆண்டு இப்படி இறப்பு
இன்னபிற குறிப்புகளின்றி
பெயரறியா வனாந்தரத்தில்
கொண்டாட விரும்புகின்றேன்
எனது மரணத்தை.

*(2005)*

•

## பயணம்

திணிக்கப்பட்ட யுத்தம்
முன்முடிவுகள் எதுவுமின்றி
நெருங்க அனுமதித்ததில்லை
புத்தரை

வெள்ளைச் சீருடையில்
ஐஸ்கிறிம் சுவைக்கும்
குழந்தைகளின் குதூகலத்தில்
ஊருக்குள் நுழையும்போதே
குளிர்ச்சி வந்துவிடுகிறது
மனதுக்கு

எந்தக் கணமும்
கழுத்தைப் பதம்பார்க்கலாம் கத்தியெனும்
பயம் உள்ளூற நகர்ந்தாலும்
குறும்பினை நிறுத்த முடிவதில்லை
உப்பும் உறைப்பும் கலந்து
மாங்காய் விற்கும் பெண்ணிடம்

யசோதரையையும் அரச இடாம்பீகத்தையும்
தூசென உதறித் தள்ள
சித்தார்த்தனை உந்தித் தள்ளியது
எதுவெனும் கேள்வி
பிரமாண்டமாய் எழும்
உயர்ந்து நிற்கும் சிலைகளையும் புறக்கணித்து

பாதிரிப்பூக்கள்
தட்டுகளில் மிதக்க
கூந்தல் ஈரஞ்சொட்ட
உலாவரும் தேவதைகளின் ஓரவிழிகள்
நிர்மூலமாக்கும் தத்துவவிசாரங்களை

இந்தப் பெண்கள் கூந்தல்
இப்படி நீளமாய் வளர
நதிகளில் நீராடல்தான்
முக்கிய காரணியெனும்
வழமையானவென ஆய்வினைத் தொடங்கினாலும்
புத்தர் கோபிப்பதில்லை
சாந்தமாய்த்தான் புன்னகைக்கின்றார்.

2.
பெருந்தெய்வங்களில்
அவ்வளவு ஈடுபாடில்லை
வைரவரையும் சில சித்தர்களையும்
பிடிக்குமென்கின்றேன்

விரையும் காரில்
விசும்பில் அலையும்
கேசம் ஒதுக்கியபடி
பிறகேன் என்னோடு கோயிலுக்கு வருகின்றாய்
என்கிறாய் வழமையான புன்சிரிப்புடன்

எனக்குப் பிடித்ததையே
நீயும் பின் தொடர வேண்டும் என்று திணித்தல்
பிடிக்காதென்பது ஒருபுறம் இருக்கட்டும்

கோயில் சந்நிதானத்தில்
விழிமூடிப் பிரார்த்திக்கும் அழகில்
உயிர்த்திருக்கும் புத்தரின் சாந்தத்தை
துளித்துளியாய்
என்னுள் கசியவிடுபவள் அல்லவா
நீ.

*(2005)*

•

## கோடை

வெயில்
அகங்காரம் பிடித்த புருஷனாய்
உலர்த்திக் கொண்டிருந்தாலும்
காற்று
புன்னகையுடன் கடந்துபோகும் பெண்ணாய்
வீசிக் கொண்டிருக்கிறது

இசை அதிர்கிறது
முன்னேயும் பின்னேயும்
நகரும் பின்தொடரும் கார்களுக்கு
நமது இருப்பையும் வயதையும்
அடையாளம் காட்டியபடி

கிலோமீற்றர்கள் நூறினைத் தாண்டி
கூழ் காய்ச்சிக் குதூகலிப்பதற்காய்
பயணித்துக் கொண்டிருக்கின்றோம்
நாகரீகப் பூச்சு இன்னமும் படியா
ஒரு கிராமத்தை நோக்கி

கிறிலில் புரட்டப்படும் கோழியும்
அடுப்பில் கொதிக்கும் கூழும்
பரப்பும் வாசத்தில்
நாவில் எழும் தாகத்தை
தீர்த்துக் கொள்கின்றனர் நண்பர்கள்
பியர்களை உடைத்து

செங்குத்தான புள்ளியில்
வதனத்தை நிறுத்தி
விழிகளால் கோணங்களமைக்கும்
பெண்களிடம் சிரத்தையாய்க் கற்கின்றோம்
கணிதத்தின் தேற்றங்கள்

மிக இயல்பாய்
உரையாடத் தொடங்கும்
இவர்களில் யாரேனும் ஒருவர்
காதலியாகவோ தோழியாகவோ
நமக்கு வாய்க்கக் கூடும் நாளை

கிளித்தட்டு விளையாட்டு
களைகட்டிய தருணத்தில்
'சமூகத்தில் மதிப்பு வாய்ந்த' மனிதர்
சற்றுக் குழப்படி செய்த நண்பனை
'பற நாயே' என விளித்து
தூஷித்திருக்கக் கூடாது சாதியை இழுத்து.

சட்டையைப் பிடித்து
மணலில் புரட்டி
சில அன்பளிப்புகள் அவருக்கு வழங்காதிருந்தால்
மனிதர்கள் அல்ல
நாங்கள்

சம்பவம் கண்டு
'அப்பா' என்று அலறியபடி ஓடிவந்தவள்
இவ்வளவு நேரமும்
கலகலப்பாய்ப் பேசியபடி
கடற்கரைக் காற்றாய்
மனதை நிறைத்துக் கொண்டிருந்தவளாய்
அமைந்ததில் எஞ்சி நின்றது
வாழ்வின் அவலச் சுவை

விவாதம் முடிந்து
நிதானம் வந்தபோது
எவரும் தீண்டுவாரின்றி
ஆறியிருந்தது கூழ்
விலகிப் போயிருந்தனர் பெண்கள்.

*(2005)*

•

## புத்தருடன் ஓர் இரவு

மழைத்தூறல் ஓய்ந்து
ஈரம் இரவை
சிறகுகளால் கோதிக்கொண்டிருந்தபோது
வீட்டுக்கு வந்திருந்தார்
புத்தர்

Santa மட்டுமே
புகைக்கூண்டுக்குள்ளால் இறங்குவார்
என்றெண்ணிய
என் நான்கு வயது மகளுக்கு
கோடையில்
சாம்பர் பூத்திருந்த அடுப்பிலிருந்து
தூசி தட்டியபடி புத்தர் வந்திருந்தது
வியப்பாயிருந்தது

நான் அருந்துவதற்கு
மிதமாய் கலந்துவைத்திருந்த
வோட்காவைப் பகிர்ந்தபோது
ஒவ்வொரு மிடறும்
தாகத்திற்கு இதமாய் இருக்கிறதென்றார்

அரசியல் சினிமா
ஜென் செக்ஸ் என
நூலறுந்த பட்டத்தைப்போல
திசையில்லாது உரையாடல் அசைந்துகொண்டிருக்கையில்
புத்தர் திடீரென வினாவினார்
கடந்துபோன காலத்தில்
நீ இழைத்த தவறுகளுக்கு
வருத்தம் கூற விரும்புகின்றாயாயென

நான்
பாவங்கள் விளைவித்த
மனிதர்கள் நிரையாக நிற்க
வெட்கிக் குனிந்தபடி
நடுங்கும் குரலில் கோருகின்றேன்
மன்னிப்பு

இப்போது
மனது மேகமாய் மிதந்து
குதூகலம் மழைநீராய் திரண்டபோது
DJ drop the s** என்றலறியபடி
ராப் பாடலுக்கு ஆடத் தொடங்குகின்றோம்
நானும் புத்தரும்

நேரம் நள்ளிரவைக் கடந்தபோது
வெறுமையான மதுக்கோப்பைகளையும்
சில நட்சத்திரங்களையும்
துணைக்கு விட்டுவிட்டு
புத்தரும்
எனது நான்கு வயது மகளும்
காணாமற்போயிருந்தனர்.

2.
மதியவுணவு
இடைவெளிகளின்போதுதான்
முகையவிழ்த்திருந்தது அவளுடனான நட்பு

அவளையும் இரண்டுவயதுக் குழந்தையையும்
சில மாதங்களுக்குமுன் உதறிவிட்டு
இன்னொரு பெண்ணுடன்
தன் துணைவன் வாழத் தொடங்கியிருக்கின்றான்
என்றாள் விழிநீரைத் துடைத்தபடி

எனக்கு வாய்த்ததைப் போல
புத்தர்
அவள் வீடு தேடி
ஓர் இரவு போகக் கூடும்;
அல்லது
அவளிடமும் அவள் குழந்தையிடமும்
புத்தரையும் காணாமற்போன என் மழலையையும்
என்றேனும் ஒருநாள்
நான் அடையாளம் காணவும் கூடும்.

*(2005)*

•

## கணப்பொழுது வாழ்வு

*தர்க்கங்களால் நிரம்பி வழியும்*
*உனது உரையாடல்கள்*
*கஞ்சாப் புகையின் மிதப்பைப் போல*
*இன்னொரு உலகுக்கு அழைத்துச் செல்லும்*
*விந்தை நிரம்பியவை*

*நிகழ்காலத்தில் வாழ முயலும்*
*மனசு கரைந்து*
*எண்ணற்ற சூத்திரங்களால்*
*பின்னிப்பிணைக்கப்பட்ட தத்துவங்கள்*
*மூளைமடிப்புகளில் படிகின்றன*

*இந்த வலைப்பின்னலுக்குள் நின்று*
*பத்துவிரல்களையும் நீட்டி*
*எந்தக் கூச்சமுமின்றி*
*எவரையும் குற்றஞ்சாட்ட முடிகின்றது*
*மிக இயல்பாய்*

*பேசவிடு!*

*குருதிசமுத்திரத்துள்*
*மிதந்துகொண்டிருக்கும்*
*எனது தீவு நாட்டில்*
*மனிதர்கள் இன்னும் வாழ்வது பற்றி*
*உனது தேவருலகக் கனவுகளில்*
*மூழ்கிவிடாமல்*
*பலவீனங்களுடன் எனினும்*
*ஏழு வார்த்தை எழுதவிடு*

மழை நாளில்
உதிர்ந்துபோகின்ற பூக்களாய்
நண்பர்கள் காணாமற்போனதை
மீசையரும்பும் வயதில்
காதலை ஆழப்பதித்த பதின்மக்காரி
'நான் நீ நினைக்கும் பெண்ணல்ல'வென
விரல்கள் விலத்திக் களத்துக்கு விரைந்ததை

எனது அழுக்குகளுடன்
தத்துவங்களைவிடக் கணப்பொழுது வாழ்வே
சாலவும் சிறந்ததெனும் நம்பிக்கையுடன்
இயல்பாய் எழுத...
வேண்டும்
எனக்கொரு கொலை நிகழாக் காலம்.

*(2005)*

•

## மழைக்காலப் பெண்

பஸ்சில் பயணிக்கும்
இருள்பிரியா விடிகாலையில்
பொழியத் தொடங்கும் மழையில்
காளான்களைப்போல
வாழ்வின் அழகிய கணங்கள்
முளைக்கத் தொடங்கலாம்

மழையில் நனைந்தபடி
ஒரு பெண் பஸ்ஸில் ஏறத் தொடங்கையில் மட்டும்
அணிந்துகொள்ளத் தொடங்குகின்றீர்கள்
அவசர அவசரமாக
உங்கள் கலாசார முகமூடிகளை

தெப்பலாகி
உள்ளாடைகள் தெரிய
பஸ்சினுள் ஏறுவது
தமிழ்க் கலாசாரமல்லவென
வெளியே முழங்கும் இடியைவிட
உரத்துக் குரல்கள் எழும்பத் தொடங்குகின்றன

அவள்
கோடையில் மட்டும்
இப்படி மழையில் சிக்கியதால்
உள்ளாடைகள் தெரிகின்றன
எல்லாப் பருவங்களிலும் அல்ல
என்கின்றாள்
பாவமன்னிப்புக் கேட்கும் நடுங்கும் குரலில்

முன்பு
பஸ் நெரிசலுள்
பிருஷ்டம் உரசி சேட்டை செய்து
அவளிடம் அடிவாங்கியவன்
உள்ளாடைகளுக்குள் முலைகள் தெரிகின்றதாவென
உற்றுப் பார்த்தபடி
இவள் வின்ரர் காலத்திலும்
இப்படித்தான் உடையணிபவளென்றபடி
அவளின் கடந்த காலத்தை
ஒரு பத்திரிகையைப்போல வாசித்துக் காட்டுகின்றான்
அனைவருக்கும் முன்னும்

அவளது ஆடைத் தெரிவுகள்
தங்களது விரல்நுனியில்
இருக்க விரும்பும் அவதானத்தில்
மதவாதிகளுக்குச் சளைத்தவர்கள் அல்ல
இவர்கள்

இப்படி
உள்ளாடை தெரிய பஸ்சினில் ஏறினால்
எங்கள் குடும்பப் பெண்கள்
எப்படி பஸ்சில் பயணிப்பதாம்;
கவலைப்படுகிறது இன்னொரு கூட்டம்

மெல்லிய குரலில்
அவள் கூறுகின்றாள்;
'கோடை காலத்தில்
வெயிலுக்கேற்ற ஆடைகள் அணிவது
எனது தெரிவு
அப்படியே
உங்கள் குடும்பப் பெண்களுக்கும்
ஓர் தெரிவு இருக்கலாம்'

கோடையில்
மழை பெய்யும் பொழுதில்
குடையுடனோ குடையின்றி நனைந்தபடியோ
பஸ்சினுள் ஏறுவது
அவளவள்களின் விருப்பு

உங்களது வாய்கள்
எதையாவது மெல்ல ஆசைப்படின்

மழையில் நனைந்தபடி எவளாவது ஏறுகையில்
உங்கள் காற்சட்டைகளுக்குள் விறைத்ததை
அவள்களுக்குப் பிடிக்காதபோதும்
சனநெரிசலில் உரசிய வக்கிரங்களை
மறைக்காமல் பேசத் தொடங்குங்கள்
இப்போதே.

*(2005)*

•

## உறையும் காலம்

ஊரிலென்றால்
மல்லிகைப்பூ வாசம்
கமழ்ந்தபடி இருந்திருக்கும்
இந்த மாதத்தில்

இரவைப் பனிமூடிக் கிடக்க
விரல்களிலும் படிகிறது குளிர்
நிழல்களைப்போல அசைந்தாடுகிறது
கடந்த காலத்தின் துயர்

நினைவுகள் கொடூரமாய் தோற்கடிக்கும்போது
அவசரம் அவசரமாக
போர்வைக்குள் நுழைந்து
**MP3 player**இல் இசையைப் பரப்பி
புத்தகங்களில் அமிழ்ந்து போகலாம்

அப்போது
விரியத் தொடங்கும்
இதுவரை அறியாவுலகில்
நடமாடுகின்றார்கள்
மனிதர்கள் மனிதர்களாகவே

தேவதைகளைக் கொன்ற
சாத்தான்கள் நுழைந்த திசை
வெளுக்கத் தொடங்கையில் மட்டும்
மறக்க முடிவதில்லை
இது
தற்கொலை செய்வதற்குரிய
தருணம் என்பதை.

***(2005)***

•

# ஆழப்புதையுண்ட வேர்கள்

சாத்தானின் காற்று
நள்ளிரவைச் சிலுவையில் அறைய
அதிர்கிறது
பாவஞ்செய்தவர்களின் வீட்டு யன்னல்கள்

ஓடி ஒளித்த
நட்சத்திரங்களில் ஒன்றில்
தேவாலயத்தை விட்டுத் தப்பியோடிய
ஜீஸசும் தஞ்சம் கேட்டிருக்கலாம்

போர்வையை விலத்த
ஏறியிறங்கும் மார்புக்குவட்டுக்குள்
கடந்த காலத்தின் துயர நதி
உறைந்து நிற்பது தெரிகிறது

தொலைவில்
பைன்மரக் காட்டுக்குள்
வைரங்களைக் காவிச் செல்லும் ஓநாய்கள்
தென்படுகின்றன பனிப்புகாருடன்

ஓநாய்களைப் பின் தொடரத் தொடங்கி
இருபத்தாறாவது முடக்கு தாண்டுகையில்
முயலின் மிருதுவுடன் கரமொன்று பற்றுகிறது
எலுமிச்சை வாசத்துடன்

இவளென்
துணையாகப் போகின்றவள் அல்லவாவென
அண்ணாந்து பார்க்கையில்
அம்மா அக்கா நண்பிகள்
அறையப்பட்டிருக்கின்றனர் சிலுவையில்

வைரங்கள் விழிகளாகி
வன்மமாய் மின்ன
இப்போது
ஓநாய்களின் பற்களில்
கோரமாய்த் தொங்குகின்றனர்
என்னில் பிரியம் வைத்திருந்தவர்கள்

'நீ
பேசியவை எழுதியவை விவாதித்தவை
எதுவுமே ஒன்றுக்கும் உதவாதவை
பார்த்தாயா,
ஓநாய்களாய் சித்திரவதைப்படுத்துவதும்
நீ மற்றும் நீ மட்டுந்தான்'

பரீட்சையில்
சிலவேளைகளில்
நான்கு தெரிவுகளுக்கும் வட்டமிடலாம்
யதார்த்தத்தில் எப்போதும்
தெரிவு ஒன்றுதான்

புதிதாய் ஒருவர்
வாழ்க்கையைப் பகிர வரும்போது
வேகத்தை நிதானமாக்கி
யோசிக்கவேண்டியிருக்கிறது சுற்றியிருப்பது குறித்தும்

எல்லாவற்றையும்
நிறுத்தலாமென்று தீர்மானிக்கையில்
ஓநாய்கள் தம் பிடியைத் தளர்த்தியிருந்தன
சிலுவைகள் நொறுங்கியிருந்தன
கடந்தகாலத் துயர நதி பெருக்கெடுத்து ஓடத் தொடங்கியிருந்தது.

*(2005)*

•

## ஒற்றைக்கல் மூக்குத்தி

கறுத்த பிரேம்
கண்ணாடிக்குள்ளிருந்து
நதியாய் அசைகின்றன
விழிகள்

ஆஸ்மாவில் அவதிப்படுகையில்
நெஞ்சு தடவிய
அம்மாவின் கரங்களை நினைவுபடுத்தும்
முதுகில் படரும்
விரல்கள்

கத்திகளாய் குத்திக்கொண்டிருந்த
கடந்த காலம் தூர்ந்துபோக
சிறகுகள் முளைக்கின்றன
மனவெளி முழுதும்

ஒருபொழுது
சப்வேயில்
அழகிய காதற்காலம்
துளித்துளியாய் கரைந்து
கருஞ்சாம்பர் வானமானதையும்
அதிலிருந்து முளைத்த துர்ச்சாபத் தேவதைகள்
வருடங்கள் மீதேறி
நிழல்களாய்ப் பயமுறுத்தியதும்
நீயறிவாயா பெண்ணே?

பளிச்சிடும்
உன் மூக்குத்தியைப்போல
நினைவுகளை விரும்பியபோது
அணியவும் எறியவும்
முடியுமெனில்
எவ்வளவு நன்றாகவிருக்குமெனும்
என் வரிகளை இடைமறிக்கும் நீ
கடந்தகாலத்தை நினைவுகொள்ள
உனக்கு கருஞ்சாம்பர் வானமெனில்
எனக்கு பிடுங்கியெறியப்பட்ட மூக்குத்தியும்
கழுத்தை இறுக்கிய கரங்களும்
என்கிறாய்

நேசிப்பை முதன்முதலாய்
அனுபவிக்கும் சிலிர்ப்பைப்போல
கடந்த காலத்தின் வலிகளுடன்
நம்மால் இன்னொரு முறை
இதமாய் நேசிக்க முடிவது வியப்புதான்

குளிருக்கு மூட்டிய
அடுப்பில்
எறிந்த சிறுகுச்சிகளாய்
இவ்விரவில் சரசரவென்று பற்றிக் கொள்கிறது
காமம்

உன் ஆடைகள்
களையத் தொடங்கிய மூன்றாம் சாமத்தில்
வினாவுகிறாய்
முலைகள் தடவும் மென்விரல்கள்
நாளை என் மூக்குத்தியை
மூர்க்கமாய்ப் பிடுங்கி எறியமாட்டாதென்பதை
எப்படி நம்புவது.

*(2005)*

•

## குளிரோடு வந்த ஞானம்

*நிர்வாண விடுதியில்*
*சுழன்றாடிய பெண்ணின்*
*அடக்கிவைத்த துயராய்*
*பொழிகிறது பெரும் பனி*

*விண்வெளிக்குச் செல்லும் பயணியாய்*
*ஆடைகள் புனைந்து*
*குளிரில் உறைந்துகொண்டிருப்பவன் முன்*
*கண்ணாடிச் சில்லுகளாய் தெறிக்கும்*
*வாழ்வின் குரூர கணங்கள்*

*பப்பாசிப் பழத்தை*
*சீவும் இலகுவாய்*
*கொலை கொலையாய் விழுகிறதாம்*
*வல்லரசுகளும் இரை கவ்வ விரும்பும்*
*ஊரில்*

*மதியம்*
*சோறும் கத்தரிக்காய்க் குழம்பும் உண்டால்தான்*
*இரவுத் தூக்கம் வருமென்பதை*
*மறைத்து பெருமிதப்படலாம்*
*ஒரு கனடியத் தேசியனென்று*

*உடல்கள் கோரமாய்ச் சிதற*
*குருதியுறிஞ்சும் பேய்கள் மூர்க்கமாய் விரட்ட*
*ஊரூராய் அகதியாய் அலைந்த பதின்மம்*
*அந்நியனாய் நினைவின் கதவை*
*எப்போதாவது தட்டுகையில்*
*சிதைகின்றேன் மூளைவெடித்து*

*இராணுவம் 'ஆளுமை' காட்டி*
*சிதைத்துப் போன*
*பதின்மத் தோழிக்கு*
*இப்போதும் நினைவிருக்குமா*
*நான் நாவற்பழம் பொறுக்கிக் கொடுத்தது.*

***(2005)***

•

## இறுகிப்போன தாழிகள்

எதை எழுதினாலும்
போலியாக இருக்கிறது
அல்லது
போலிகளைப் பேசுவதே
கலகமாகிறது

'இராணுவம் கற்பழிக்கத்தான் செய்யும்'
அற்புத தரிசனங்கள் தருபவர்கள்
வரலாற்றை எழுதவும்
பெண்களைச் சிதைத்துச் செல்பவர்கள்
திசைகள் எங்குமலைந்து
அரசியல் பேசவும்
செய்யும் விசர்ப்பொழுதில்
எதைப் பேசினாலும் எடுபடாது

தோள்கள் தினவெடுத்தால்
கொன்று குவிக்கவும்
குறிகள் விறைத்தால்
புணர்ந்து களிக்கவும்
தமிழரென நாமமது
தரணியிலே கொண்டோம் உமக்காய்.

கொல்லுங்களடா
கொல்லுங்களடா
வன்புணர்ந்துவிட்டு
கிணற்றிலும் கிரனைட்டிலும்
அடையாளங்களைச் சிதைத்துவிட்டு
எகத்தாளமாய்ச் சிரிக்கவும் செய்யுங்களடா

வரலாற்றின்
இருண்ட குழிகளிலிருந்து
யோனிகளும் முலைகளும்
எழுந்துவந்து
பூர்வீக நிலங்களிலிருந்து
அடியோடு வேரறுக்கும்
இந்தப் பாவிகளை

சுதந்திரக் காற்று பனிப்புலத்தில்
சுழன்றடிப்பினும் களிப்புறோம்
மனிதர்களையும்
இளமையையும் தொலைத்துவிட்ட
கடந்தகாலத் துயர்
விரும்பி யாசிக்கும் மரணத்தை

தங்கையிலும் துணையிலும்
அதிகாரம் அத்துமீறாதவரை
நுரைக்கும் பியருடன்
ஆட்டுக்கறி சுவைத்து
அனைவரும் பேசிக் கொண்டிருக்கலாம்
அரசியல் அறம்.

(2005)

•

*(இளவயதிலேயே, ஈழத்தில் உரையாடல் பலவந்தமாய் நிறுத்தப்பட்ட தர்சினிக்கு...)*

## கரையொதுங்கும் புறாவின் சிறகுகள்

எல்லா விம்பங்களும் உடைய
இலையுதிர்த்த
மரங்களின் கிளைகளில் தொங்கும்
உறைந்துபோன பனியாய்
இறுகுகின்றது மனது

ஒரு திசை முழுதும்
கண்ணாடி நிரப்பிய அறையிலிருந்து
கதகதப்பாய்க் கம்பளி போர்த்தி
தெருவை இரசிக்கையில்
குளிரிலும்
ஒப்பனை கலைந்துவிடக் கூடாதென்ற அவதியில்
'வாடிக்கையாளர்' தேடும் பெண்களும்
வீடற்ற மனிதர்களும்
நீல நிறமாக்குகின்றனர் பொழுதை

எதிர்ப்புறத்து
தேவாலயத்தின் உச்சியிலிருந்து
பலகணியில் கரையொதுங்கிய புறாவின் சிறகுகள்
நினைவுபடுத்தும்
குளிராய் இருக்கிறதென்று
நெருக்கமாய் அணைத்தபடி நடந்த
காதலியின் வின்ரர் கோட்டினை

எல்லாக்காட்சிகளும் மாறுகின்றன
சடுதியாய்.

வீடற்ற ஆண்கள்
வாடிக்கையாளரைத் தேடிய
பெண்களின் கரங்களை
நேசமாய் கோர்த்தபடி செல்ல
மஞ்சள் பூக்களிடையே
வானவில் தோன்றுகின்றது
அவர்களின் குழந்தைகள் சிதறி ஓட.

மனது பேருவுவகை கொள்ள
I am rapping...
புத்தரும் இயேசுவும் தேநீரருந்தி
இரசிக்கின்றனர்
பிள்ளையாரின் hip-hop நடனத்தை

இது எப்படி சாத்தியமெனும்
மூளையின் நியூரனொன்றில்
அம்மாவின் குரல் கரைகிறது
'நீ என் வயிற்றில் இருக்கிறாய் மகனே!'

வெளியே
உலகம் கூறிக் கொண்டது
நான் இறந்துவிட்டதாய்.

*(2005)*

•

## சிதைவு

மதுக்குவளையின் விளிம்பிலமர்ந்த
எலுமிச்சையாய்
நிலவு மிதக்குமோர் பொழுதில்
ஒப்பனைகள் நீக்கி
மன்னிப்புக் கேட்கத் தொடங்குகின்றேன்
சட்டகங்களுக்குள் உறைந்திருக்கும் மனிதர்களின் முன்

வெளியே
இன்னமும் உருகி வழியும்
வெம்மையைத் தவிர்க்க
ஏசி நிறையுமென் அறையினுள்
நுழைகின்றான்
இவான் எனுமொரு சிறுவன்

வெறுமையையும் முடிவிலா கவலையையும்
அறையினுள் அலையவிட்டு
மேசையில் குழந்தையொன்றின் குருதி தோய்ந்த உடலை
வெறித்துக் கொண்டிருப்பவனைக் கண்டு
பதற்றம் நிரம்புகிறது அவனது விழிகளில்

குழந்தைமையை
அவன் தொலைத்துவிடாதிருக்கும்
கவனத்துடன் கரம் பற்றி
நடக்கத் தொடங்குகின்றோம்
கோரையும் நாலுமணிப் பூக்களும் நிறைந்த வரம்புகளினூடு

வயல்கள் முடிந்து
பிள்ளையார் கோயில் முளைக்க
கேணியின் மூன்றாவது படியில்
புத்தகத்துடன் அமர்ந்திருக்கின்றாய் நீ

விலத்திக்கொண்டு
போக நினைப்பதெல்லாம்
பிணியாய் ஒரு சுழலில்
சிக்கவைத்துக் கொண்டிருக்கும் அவலத்தை
உடைந்த கண்ணீர்த் துளியொன்றின்
உப்புக் கரிப்புடன் பகிர்கையில்
செய்வதறியாது திகைத்து
என்னை ஆரத்தழுவ வருமுன்னை
அதிகாரம் குறுக்கிடுகிறது
அன்றைய பொழுது அஸ்தமித்துவிட்டதென்று

வந்த இவான்
இடையில் எங்கே போனானென
பதற்றத்துடன் வீடு திரும்புகையில்
முன்னர் மேசையிலிருந்த
குருதிதோய்ந்த குழந்தையின் படம்
இவானாய் மாறியிருந்தது
நெஞ்சில் ஆணிகளாய் அறைகிறது

குழந்தைகள் தொலைந்துகொண்டிருக்கும்
நாட்டை
பூர்வீகமாய்க் கொண்டவர்க்கு
நேசித்தல் என்பதுகூட
நம்மை நாமே சிதைத்து
உருவழிப்பதுதான்.

*(2006)*

•

# இலையுதிர்காலத்துப் பிரியங்கள்

தனிமையை
ஒரு பூச்செடியாய் வளர்க்கத் தொடங்குகையில்
இலைகளாகவும் கனிகளாகவும்
மலர வைத்தேன்
பகிர முடியாத என் பிரியங்களை

எமினெமின் குழந்தைப் பாடல்களில்
நெகிழ்ந்து ஈரங் கசிகையில்
ஷகிராவின் இடுப்பசைவில் கிறங்கி
கால்களில் சுருதி சேர்கையில்
தன்னியல்பு மறந்து
கண் சிமிட்டத் தொடங்குகின்றது
செடியும்

மௌனக் கவிதையைப் போல
ஆயிரம் சனங்கள் ஆரவாரிக்கும் சபையிலும்
இதைக் காவிச் சென்றாலும்
என் வட்டத்துக்குள் நுழைய அனுமதித்ததில்லை
எங்களைப் பிரித்து வார்த்தைகள் எழுத விரும்பும்
எந்த விரலையும்

வருடங்களாய்
எவரையும் அனுமதித்திராத
என் தோட்டமடையும்
புதர் படர்ந்த ஒற்றையடிப் பாதையில்
நீ மலர்ந்துவந்து
பிரியம் கூறுகையில்
செவியிரண்டும் சிலிர்க்க
ஒரு சாம்பல் நிற முயலாய்
மாறிவிடுகிறது எனது செடி

வரிவரியாய்
நீ தவறு திருத்திய
என் கவிதைகளும்
வனப்புடன் மிதக்கத் தொடங்குகின்றன
அதன் மேனியெங்கும்

வாழ்வைக் கனவாய் களிப்பவனுக்கு
இதுவும்
பருவக்காற்றாய்த் தவழ்ந்து வந்து
மனதை நெகிழ வைத்து
சடுதியாய்க் கலைந்து போகும்
இன்னொரு நெடுந்துயராகவும் இருக்கலாம்

விலகிச் செல்லும் கணத்தில்
மிருதுவான முயலை
நீ எடுத்துப்போனாலும்
உலர்ந்துபோன செடியையாவது
மீதியாக விட்டுச் செல்க
எனக்கு.

*(2006)*

•

## யசோதரா

புத்தரைப் பின் தொடரும்
தியானமும் துறவும் பூசிய
வாழ்வுத் தெருவில்
தற்செயலாய்ச் சந்தித்தேன்
பிரிய யசோதராவை
ஒரு மூலைக்கடையில்

சேலைக்குப் பதிலாய்
குட்டைப் பாவாடை அணிந்திருந்தாள்
இயல்பை மீறி ஒப்பனைகள்
அலங்கோலப்படுத்தினாலும்
மறந்துவிடாதிருந்தாள் புன்னகைப்பதை

வெள்ளைத் தோலுடன் மண்ணிறக்காரனுக்கு
என்ன பேச்சு வேண்டிக் கிடக்கிறதெனும்
வன்மம் ஒளிரக்கண்டோம்
அப்பொழுதில் தெருவைக் கடந்துபோன
காவற்துறையின் விழிகளுக்குள்ளும்

ஓர் அகதியின் துயரங்களை
போரின் சிதைவுகளை
அவளுடன் பகிரப் பகிர
மனது குழைந்து
இரவு ஓவியமாயிற்று

'ஆணின்' தனித்துவத்தை
இழந்துவிடாதிருக்கும் கவனத்துடன்
எனக்கான நேரத்தை
முடக்குத்தெரு பெஞ்சில்
ஒதுக்கியமைக்கு நன்றியென
சில நோட்டுகளை நீட்டினேன்;
செய்யாத தொழிலுக்கு
சம்பளம் பெறுவதில்லையென
மறுத்தாள் அதட்டிய குரலில்.

பின்
அந்நெடுமிரவில்
கண்கள் கூசா வெளிச்சத்தில்
கிறீக் உணவும் வைனும்
பகிர்ந்துகொண்டிருக்கையில்
தன் உணர்வுகளை
சிகரெட் புகைக்குள் மறைத்தபடி
எங்கள் காயங்களும் வெறுமைகளும்
வேறுவிதமானவை
உனக்குப் புரியாதென்றாள்
விழிகளை ஆழ ஊடுருவியபடி

சொல்லாத வலியின் மௌனந் தாக்க
தியானங் கலைந்து
வனம் நீங்கி
பதற்றத்துடன் தன் இல்லம் மீளக் கண்டேன்
புத்தரை
பின்னொரு பொழுதில்.

*(2006)*

•

## எதிர் உலகம்

முதுகைக் காட்டி
குழந்தையாய்ப் போர்வையில்
சுருண்டிருக்குமுன்னை
விரல்களால் ஆகர்சிப்பதோ
இழுத்து அணைப்பதோ
சாத்தியமில்லை இனி

புழுக்கள் ஊர்வதுபோல
நீ அருவருப்படைய
ஒரு போலி நாடகத்தின்
கதாபாத்திரங்களாய் நாங்கள் மாறுவது
உடல்கள் மழை நீரில் சிலிர்த்த இலைகளாய்
உயிர்த்த இரவுகளுக்கு
நாம் செய்யும் துரோகம்

அந்நியப்பட்டது
புரிந்துபோனாலும்
இன்னும் நூலிழைக் காரணங்களுடன்
ஊசலாடுகிறது
உறவு

ஒட்டுதல் சாத்தியமில்லையென்கின்றபோது
வெட்டியாவது போகலாம் என்றால்
கத்தியை இரத்தம் தெறிக்க
முதலில் வீசுவது
யாரென்ற தயக்கம் நமக்குள்

குரல்கள் ஒலிக்கின்றன
குழந்தை பிறந்தால்
எல்லாம் இயல்பாகும்.

நம்முடைய துயரங்களை
இன்னொரு உயிரில் கரைப்பது
புணருமிரு பாம்புகளை
சிதைத்துவிட்டு
குற்றத்துடன் நகர்வதற்கு நிகர்

இந்த அதிகாலைப் பனி
தெருவை அழகாக்குவதுபோல
நமது ஈகோக்கள் கரைந்துபோகின்ற
ஒரு நாளில் இயல்பாய் புன்னகைக்கலாம்

நேற்று
அந்திவானத்தில்
எதிர்த்திசைகளில் சிறகடித்துப் பறந்துபோய்
துயர்களை மீட்டிய
இரண்டு குருவிகளின் நினைவுகளுடன்...

நடப்போம்
இடைவெட்டாத நமக்கான பாதைகளில்.

*(2006)*

•

## இன்னொரு போர்க்களம்

*யுத்தமொன்றில் தோற்று*
*வீட்டுக்காவலை விரும்பித் தேர்கையில்*
*சாளரமும் சாலையோர மனிதர்களும்*
*நிறங்களை உதிர்த்து*
*கரைத்தனர்*
*நாட்களில் கரிய வர்ணத்தை*

*நினைவுக்கும் நனவுக்குமிடையில்*
*அலைந்து திரிந்து*
*கறுப்பும் வெள்ளையுமாய்*
*ஓர் ஓவியத்தை*
*வரைய முயல்கையில்*
*நீ நுழைகிறாய்*
*ஒரு பாடல் வேண்டுமென்று*

*அவ்வளவு எளிதல்ல*
*ஒரு பாடலை*
*உருவாக்குதல்*

*நளினமான வரிகளும்*
*தெறித்துவிடா இசையும்*
*தேயிலையைப் பாலில் அளவாய் கலந்தாற்போல்*
*சுவைக்கின்ற குரலும்*
*நல்ல பாடலுக்கு அவசியம்*

*மேலும்*
*தயாரில்லை நான்*
*வனப்புமிகு வார்த்தைகள்*
*இறுதியில் குருதி தோய்ந்து*
*குரூரமாய் நகைப்பதை*
*சகித்துக்கொள்ள*

'தயங்காதே
தொடங்குக போரை
விழுப்புண் ஏற்குமுன் மேனியை
நெய்தோய்த்த என் கூந்தலால் தடவி
ஆற்றி அனுப்புவேன்
அடுத்த நாளும்...'
அலைவரிசைகளில் வந்து விழும்
தோற்ற போரின் முன்கேட்ட குரல்.

ஏற்கெனவே
புதுப்பாடல் புனையக் கேட்டு வந்தவர்களை
உதறித் தள்ளியது மாதிரி
உன்னையும் ஆக்கியிருக்கலாம்
தொலைதூரத்துத் தாரகையாய்.

2.
பின்னிரவில்
மயிலிறகு வீசி மடியில் கிடக்கும்
பிரிவில்
பசலை படர்ந்து வெம்பித் தவிக்கும்
சங்ககாலப் பெண்ணுமல்ல
நீ

போர்க்களத்தில்
வீசுகின்ற வாளாயும்
தாங்குகின்ற கவசமாயும்
மாறிவிடத் துடிப்பவளின்
மொழி கிள்ளிப் புனைவேன்
கவிதை

முடிக்க வேண்டிய ஓவியத்தின்
மீதிக் கோடுகள்
உன் இதழில் அசையக் கண்டபின்
சாளரம் உடைத்து
சாலையோர மனிதனுமாயினேன்
நான்.

*(2006)*

•

## கனவு

கத்தரிப்பூ விளக்குகள்
இரவைப் பாம்பெனக் கவ்வுகையில்
ஐந்துதலை நாகத்தின் நாவுகளிலிருந்து
தீர்ந்துபோகா காமசூத்ராவின்
கடைசிப் பக்கங்களை வாசிக்கும்
தாகத்துடன் இறங்கிவரும்
தேவதைகளின் ஆடைகள்
மேற்கிலிருந்து தென்கிழக்குநோக்கி நகரும்
வால்நட்சத்திரங்களாய் ஔிர்கின்றன
மதுவும் இசையும்
வர்ணக் கலவையாய் வயிற்றினிலிறங்கி
கால்களில் தீ பற்றியெரிந்து
சாத்தான்கள் முகமூடி கிழிக்க
மப்பும் மந்தாரமுமாய் மழை
பொழியத் தொடங்குகிறது
தேவதைகள்
நவீன ஓவிய ஒப்பனைகள்
கலைந்துவிடாதிருக்கும் சிரத்தையெடுப்பினும்
தமக்கான கிறுக்கலின்
தூரிகையைத் தெரிவு செய்யும்
சுதந்திரவெளி
கனிகின்ற களிகாலத்தின் பெருமிதத்தில்
பூனைமயிரின் வேரினிலிருந்து
நறுமணத்தைப் பரவவிடுகின்றனர்
கால்களில்
பொஸ்பரஸ் எரிமலையாய்ப் பொங்கினாலும்
தூரிகையில் வர்ணந்தெளிக்கும் குறுகுறுப்புத் திரண்டாலும்
இளவரசிகளின் அனுமதியின்றி
கங்குகளை அணைத்துவிட முடியாது
பெரியண்ணர்கள் கண்காணிக்கின்றனர்;

ட்ராகன்கள்
தேவதைகளின் வளைவுகளில்
யார் தூரிகையால் முதலில் வரைவதெனும் போட்டியில்
இடிகளை முழங்கச்செய்து
வாட்களை மின்னலாக்கிப் போரிட்டு
கசியும் இரத்தத்தைப் பனியில்
துடைத்துவிட்டு
மீண்டும் நெருப்புக்கங்குகளை
பெருமிதத்துடன் பற்ற வைக்கின்றன
விடிகாலை
நான்கு நாற்பத்துமூன்றில்
தம் நெருப்பை
ஏதோ ஒரு கோட்டில் ஓவியமாக்க உடன்பட்டு
அணைத்துக் கொள்ளும்
தேவதையும் சாத்தானும்
தெருவோரத்தில் அநாதரவாய் உறைந்து நிற்கும்
காரின் கண்ணாடியை
வீடற்ற ஒருவன் தட்டுகின்றபோது
அவசர அவசரமாய்
மனித ஒப்பனைகளை
அப்பிக்கொண்டு நகர
எல்லாம் கனவெனச் சிதறும்.

***(2006)***

•

## தீர்வு

புறாமலையில்
விஜயனால் தந்திரமாய் ஏமாற்றப்பட்ட வெஞ்சினமும்
தன் மூத்தகுடிகளை நிராதரவாய்க் கைவிட்ட துயரமும்
தோயத் தன்னைச் சிதைத்துக்கொண்டிருந்த
குவேனி
வள்ளமேறிவந்து
நகரத் தெருக்களில் கால்களைப் பதிக்க
புழுதி சுழன்றாடி
நகரைக் கனவாய்ப் படர்ந்ததாம் மழை

கடற்கரையில்
கால்கள் நனைத்து சுண்டல் சுவைத்து
நெல்சன் தியேட்டரில் படங்கள் பார்த்து
நீ இன்னவின்ன இனமென்றில்லாது
பொதுச்சந்தையில் கலகலக்கும்
சனங்களின் மொழியில்
தன் துயரினைத் தொலைத்தாள்
குவேனி

கொத்துரொட்டிகளின் தப்பாத் தாளத்திலும்
பஸ் நிலைய பல்லின மொழிக்கீதத்திலும்
தன்னை உயிர்ப்பிக்கையில்
பலவந்தமாய்க் குடிவைக்கப்பட்ட புத்தரைக் கண்டு
இயற்கையை வழிபடும்
குவேனி கோபித்தாளில்லை
அவரையும் நேசிக்கத் தொடங்கினாள்
பேச்சுத்துணையாக்கி

புத்தரும் குவேனியும்
நேவிக்கப்பல்கள் தொலைவில் மின்னும்
கடற்கரையில் கால்கள் புதைய கரங்கள் கோர்த்து
உலாவுகையில்
கோணேசரும் பத்திரகாளியும்
காதற்கிறக்கத்திலும் பதற்றத்திலும்
இருப்பது கண்டு புன்னகைப்பதுண்டு

கோணேசர் பாவம்
இராணுவம் சூழவிருக்கும் அவருக்கும்
ஊரடங்குச் சட்டமுண்டு;
பின்னிரவு நீளுமுன்னர் தன் தலம்
மீள வேண்டிய அவதி அவர்க்கு

சங்கமித்தா
புத்தரைச் சந்திக்க வந்தவொருபொழுதில்
எல்லாம் தலைகீழாயிற்று
குவேனியுடன் புத்தர் நட்பாயிருப்பதை
சகிக்கா சங்கமித்தா
உறுமிய ஜாதிய நரிகளை உசுப்பிவிட
கொந்தளிக்கத் தொடங்கிற்று
மீண்டும் நகர்

அரசமரக் கிளைக்குப் பதிலாய்
சங்கமித்தாவின் கரங்களில்
கொடும் ஆயுதங்கள் முளைக்கத் தொடங்கின
கோணேசருடன் காதல் சரசமாடிக் கொண்டிருந்த
காளியும் ஆடத் தொடங்கினாள்
தற்காப்பு ஆட்டம்

தம் இயல்பு மறந்து
காளியும் சங்கமித்தாவும்
ஊழிநடனம் ஆடுவது பொறுக்காது
இடைநடுவில் புகும் குவேனியையும்
கொத்துரொட்டித் தகட்டால் குற்றுயிராக்கி
நரிகளுக்கு நிகராய்
விழும் தலைகளுக்காய் தெய்வங்களும் அலைகின்றன
நாக்குகளைத் தொங்கவிட்டபடி

பிறகு
புத்தர் குவேனி எனும்
இரு சடலங்கள்
காலப்பெருவெளியில் மிதந்துகொண்டேயிருந்தனவாம்
ஒரு சிறுதீவில்
அமைதி வருவது எப்படியெனும்
எளிய சூத்திரங்களைத் தம்முடல்களில்
சுமந்தபடி.

*(2006)*

•

## பொய்த்துப்போன பருவங்கள்

சோளம் விளைந்த விளிம்பில்
நடக்கும் அவனை
மழைபெய்து நெகிழ்ந்த மண் அழைக்கிறது
ஒரு பருவத்தை நினைவுபடுத்தும்
எதையேனும் வனைகவென

அவனுக்குள் அவனுக்கான பருவங்கள்
களிப்புடனும்
முடிவில் சோளவிலைகளில் கூர்மையைப்போல
குத்துகின்ற வலியுடனும்
இலவம்பஞ்சாய் வெடிக்கின்றன

வெடித்துச் சிதறி காற்றிலலையும்
பஞ்சைத் துரத்திப் பிடிக்கும்
சிறுவன்
சுரீரென்று காலைக் குத்துவது
முள்ளா என்று திரும்பிப் பார்ப்பதற்குள்
பலவந்தமாய் அடித்துத் துரத்துகிறது
ஷெல் துண்டு
அடுத்த பருவத்துக்கு

பெண்களைப் பற்றிய
கிறக்கமான கனவுகள்
அரும்பும் மீசையுடன் துளிர்க்க வேண்டிய பொழுதில்
துவக்கு தூக்க வேண்டிய அவதியும்
சரிகின்ற மனிதவுடல்களும்
எத்தித்தள்ளிவிடுகின்றது
இன்னொரு காலமாற்றக் கடலில்

பதின்ம முடிவில் ஒரு சுழலாய்
திணறவைக்கும் காதலின் நினைவில்
தனிமையில் புழுங்குபவன்
இருப்பின்றியலையும் குருவிகளுடன்
யன்னலோரமாயிருந்து
சினேகித்துச் சிலிர்க்க
வசந்தகாலங்கள் வரும்

2.
நாட்டின் நினைவில்
ஒரு சமாதானப் புறாவை வனையத் தொடங்குமவன்
திரள்கின்ற மண்ணில்
துவக்குகளும் முண்டங்களும் மிதக்கின்ற திகைப்பில்
பீதியுறத் தொடங்கி
தன்னையே வனையத் தொடங்குகின்றான்;
சோளப்பண்ணைக்கு காவலிருப்பவளோ
முகஞ்சுழித்து ஒதுக்குகிறாள்
குறைகளே மிகுதியாயிருக்கும் இவன் உருவை.

கொலைகளுடன் வளர்ந்து
சமூகம் ஆகாதெனும்
சுயமைத்துனத்துடன் தன்னைத் திருப்திப்படுத்துபவனை
தெய்வங்கள் மட்டுமல்ல
இளகிய மனங்கொண்ட கிராமப்பெண்ணும்
ஏற்றுக்கொள்ளல் அவ்வளவு எளிதல்ல

பண்ணையைக் கடந்து
நீள நடக்கத் தொடங்குகின்றான்
அவன்.

சோளம் பொத்தியவிழ்க்க
கோடைகள் வந்தாலும்
கதவைச் சாத்தி அனுப்பி வைக்கும்
பயணிகளை
மீண்டும் ஏறெடுத்துப் பார்ப்பதில்லை
காவலிருக்கும் கிராமப் பெண்கள்.

*(2006)*

•

## செவ்வரத்தம்பூத்தெரு

உன்னைப்போல் மனங்கலங்க வைக்கின்ற யுத்தகால அனுபவங்கள் எதுவும் எனக்கு வாய்த்திராத போதும், தடயங்களைத் தொலைத்தவ ளாய் மரணத்தின் விளிம்புகளில் நின்றுகொண்டு நாளைய இருப்பு குறித்த எந்தவித எதிர்பார்ப்புகளுமில்லாமற்போன கணங்களைக் கடந்தவள்தான், நானும். இனம்புரியாத பயங்களால் நிரம்பித் தளும்பிக் கொண்டிருக்கும் மனதோடு தொடர்ந்து வாழ்வது எங்ஙனம் சாத்தியம்.. வாழ்வு இத்தனை வெறுப்பிற்குரியதா.. என்றெல்லாம் சிந்திக்கத் தோன்றுகின்றபோது ....

*(பழைய கடிதமொன்றிலிருந்து.....)*

*பிணியும் சோர்வும்*
*வேண்டாவெறுப்பாய் புணர்ந்து*
*ஆஸ்மா ஓர் அவதியாய் உடலில்*
*இறங்கிக்கொண்டிருக்கையில்*
*வானொலியில் கசியும் பாடல்களின்*
*தனிமை நிரப்பி*
*சுவடுகளைப் பதிக்கத் தொடங்குகின்றேன்*
*செவ்வரத்தம்பூக்கள் நிறைந்தவுனது தெருவில்*

*உதிர்ந்து கிடக்கும்*
*பூக்களைப் பொறுக்கும் சிறுமிகளின்*
*ரிபன்களிலிருந்து படபடக்கும் வண்ணத்துப்பூச்சிகள்*
*அமர்ந்துகொள்கின்றன*
*ஆற்றினுள் வனமாய் கூந்தலை விரித்த*
*தேவதைகளின் விழிகளில்*

*‘பிரித்’தோதும் பிக்குகள்*
*இரத்தத்தைக் குவளைகளில் நிரப்பி*
*படைப்பதைச் சகிக்காது*
*விகாரைவிட்டு நீங்கும் புத்தர்*
*பின்னவிகிதத்தில் மிளிரும்*
*உன்வீட்டுக்குத் தானும் வரலாமா என்கிறார்*

உலகமுருளும் வேகத்தில்
உதைத்துத் துரத்தப்பட்டு
தெருவோரவாசியான பெரியார்
பழைய நண்பர் புத்தருடன்
இணைந்து நடக்க
வெசாக் விளக்குகளை
எரித்தபடி வரும் சிறார்களின்
ஆடல்களிலும் பாடல்களிலும்
நெகிழ்ச்சியுறும் அம்மாலைப்பொழுது

திரும்பவும்
விகாரைக்குப் போகப் பிரியப்படா புத்தருக்கு
மிதிவெடியில்
ஒற்றைக் காலிழந்த ஊர்வைரவர்
புகலிடம் கொடுத்து
ஆடிய களைப்பை நீக்க அழைத்துச் செல்கிறார்
கள்ளுக்கொட்டிலுக்கு

நதியாகவும் பனிவெளியாகவும்
தகிக்கும் பாலைவனமாயும்
விரிந்து வித்தைகாட்டும்
நம் உடல்கள் எழுதத் தொடங்கும்
காவியத்தின் முடிவை
சுற்றி வளைக்கும் துப்பாக்கிகளுக்கு
காணிக்கையாக்கி
மீண்டும் நுழைகின்றோம்
நமக்கான சவப்பெட்டிகளுக்குள்.

*(2006)*

•

## சிறகு

பசுமை விரித்த புல்வெளியில்
மஞ்சளாய் பூத்திருக்கிறது
நேசம்
வலசை போய்
மரங்களில் வந்தமரும் பறவைகளின்
சிறகில் மிதக்கின்றன
எல்லைக்கோடில்லா
நிலப்பரப்புகள்

மதியப்பொழுதில்
பெயரறியா நிலப்பரப்பை
உதிர்க்கும் பறவை
எனக்காய் விட்டுப் போகின்றது
நெடுந்தூரப் பிரிவின்
வாதையை.

•

## அலை

எழுதி முடிக்கும்
ஒவ்வொரு வாக்கியத்திலும்
தெறிக்கிறது துயரம்

மழைபொழிந்து
குழந்தைகள் குதூகலிக்க வேண்டிய
நிலப்பரப்பை
குருதியலைகள் மூர்க்கமாய்
கரைத்துக் கொண்டிருக்கின்றன

ஒரு முத்தத்தையும்
இன்னொரு முத்தத்தையும் பிரிப்பது
வினாடிகள் அல்ல
விரலிழுக்கும் துப்பாக்கி விசை.

*(2006)*

•

## தரிசு நிலச் செடி

*நகரம் பிதுக்கித் தள்ளுகிறது*
*தனக்கான அவதிகளினூடு*
*என்னையும்*

*ஒரு செர்ரிப்பூ*
*உதிர்ந்து*
*நிலத்தை வந்தடைவதற்குள்*
*மலைபோல குவிகின்றன*
*கட்டவேண்டிய கடன் பில்கள்*

*நான் ஓட வேண்டும்*
*அல்லது ஓடிக்கொண்டிருப்பதாய்*
*நடிக்கவாவது தெரிந்திருக்கவேண்டும்*

*நகரம் ஏற்றுக்கொள்வதில்லை*
*வீடற்றவர்களை*
*மட்டுமின்றி*
*மனதில் ஈரலிப்புள்ளவர்களையும்.*

*நீயொரு*
*மரம் நட முயல்கின்றாய்*
*எனக்குள்*

*தரிசாகிக் கொண்டிருக்கும் மனதில்*
*அவ்வளவு இலகுவல்ல*
*தளிரொன்று அரும்புவது.*

*(2006)*

•

## வலி

நண்பகல் தாண்டி
நீளும் துயிலில்
இழந்து வந்த ஊரை
துருவக் கரடி
பன்றியிறைச்சியாய் கடித்துக் குதறும்
கனவு முளைக்கும்

ஒரு போராளி
ஏதேனுமொரு ஒழுங்கையின் திருப்பத்தில்
சந்தித்துவிடும் எதிரியைப்போல
தொலைபேசி அழைப்பு
திடுக்குறச் செய்கிறது
துயில் கலைத்து

வெளியே தோட்டத்தில்
அரும்பிக்கொண்டிருக்கும்
தக்காளியினதும் ஸ்ராபெரியினதும்
மினுமினுப்பில் கவிதைகளாகின்றன
அவளது கன்னப்பருக்கள்

ஒத்த அலைவரிசையுள்ள
நண்பனுடன்
நெடுந்தூரம் பயணிக்கையில்
சுட்டெரிக்கும் வெயிலையும்
காரில் காத்திருக்கும் கணங்களையும்
கடந்துவிட முடிகின்றது
புத்தரின் சாந்தத்துடன்

நீச்சல் தெரியாதவனையும்
வசீகரிக்கும் கடலை
காதலியின் ஈரவிதழ்களாய்
கவ்விக் களிக்க
மேற்கினில் மறையும்
சூரியன் நாணிச் சிவந்து

நீரில் ஊறவைத்த உடம்பை
பச்சைமிளகாய்க் கொத்துரொட்டி துவட்டி விட
மதுவும் கடலையும் நங்கையரின் மொழியும்
நினைவுபடுத்தும்
பீத்தோவனின் எழுதிமுடிக்கா
இசைக்கோர்வையின் இதத்தை

எல்லாம் அற்புதமாய்த்தான் தெரிந்தன
பத்துவயதுப் பையன்
சுழியில் மூழ்கி
மூச்சிழந்த அந்த நொடி வரை

கொலைகளை
ஆடையில் ஒட்டிக்கொள்ளும்
கடற்கரை மணலைப்போல
உதறித்தள்ளி நகர்ந்துகொண்டிருப்பவனுக்கும்
வலிக்கத்தான் செய்கின்றது
மரணம்
சிலவேளைகளில்.

*(2006)*

•

## அகாலம்

நாள் குறிக்கப்பட்ட மரணத்தை
எப்படியெதிர்கொள்வதென
மழையுமிருளும் மூர்க்கமாய்ப் போரிடுகையில்
பூங்கா இருக்கையிலமர்ந்து யோசிக்குமொருவன்
நடக்கத் தொடங்குகின்றான் நூலக வாசலை நோக்கி
எல்லாப் புத்தகங்களும்
மரணம் நிகழ்வதற்கான சாத்தியங்களை எதிர்வு கூறுகின்றனவே தவிர
இழப்பை ஆற்றுவதற்கான கதவுகளை
இறுக்கச் சாத்தியிருக்கும் சலிப்பில்
புரட்டத் தொடங்குகின்றான்
தற்கொலைகளால் நிரப்பப்பட்ட தொகுப்பை.
சில்வியா பிளாத்தின் கவிதையோடு
விரியுமொரு தாளில்
உலர்ந்துபோய்க் கிடந்த பெயர்தெரியாப் பூச்சியொன்றை
இவன் உற்றுநோக்கியபொழுதில்தான்
நண்பனின் வாசனை உதிர்ந்திருக்க வேண்டும்
தனிமை இருகரங்கொண்டு தோளிலமுத்த
துயரினில் மூழ்கி விறைத்துக்கொண்டிருக்கும் இரவை
சிறுவனாயிருப்பின்
அம்மாவின் முதுகின் பின் முடங்கிப்படுத்தாவது
கடந்துபோயிருக்கலாம்
'என்னைவிட்டு போயிட்டானடா' என
ஆஸ்பத்திரி ப்ளோரில்
பதறியோடிவந்து விரல்நடுங்கும் காதலிக்கு
ஆறுதல்கூற வார்த்தையில்லா மொழியின் வெறுமை
மூளைசிதைந்து
வடிந்துகொண்டிருந்த நண்பனின் குருதியாய்
இவனில் பரவ
கள்ளிச்செடிகளில் தேன்குடித்து
பூவிலமர்ந்த தும்பிகளை
துரத்தியோடிய சிறுவயது நினைவுகள்
சட்டமிட்ட ஓவியமாய் உறைந்துபோகின்றன.

ஊருமில்லை; பால்யம் விரிந்த ஒழுங்கைகளுமில்லை;
இனி நீயுமில்லை.

*(2006)*

•

## ***கண்ணீர்த் துளி***

*உன் விரல்கள்*
*வயலினைத் தொட்டகணத்தில்*
*மின்னல் தெறிப்பில்*
*வண்ணத்துப்பூச்சிகள்*
*பறக்கத் தொடங்கின*
*அறையெங்கும்*

*தங்கள்பாட்டில் பறக்கும்*
*பூச்சிகளின் சுதந்திரம்*
*எனை உறுத்தி*
*சிறகுகளைப் பிச்சுப்போட*
*கொடுமை தாளாத*
*வயலின்*
*மலைப்பாம்பாகி*
*நெரிக்கிறது கழுத்தை*

*கனவா என்று*
*விழிக்கின்றேன் நான்*
*இல்லை*
*நிஜந்தான் என்கிறது*
*என் வார்த்தை தினம் கொல்ல*
*உதிரும் உன் கண்ணீர்த் துளிகள்.*

*(2006)*

•

## அவதி

திறக்கப்பட்ட
ஒரு புத்தகத்தின்
இரண்டு கதாபாத்திரங்களானோம்
நாம்

தாபத்தோடும்
நேசத்தோடும்
வக்கிரங்களோடும்
சுவாரசியமாய் நகர்ந்தது கதை

மூடிவைக்கப்பட்ட புத்தகத்தின்
முடிவு
இப்போது நினைவினிலில்லை

திரும்ப
பக்கங்களுக்குள் நுழையவும் முடியாது
வாசித்து முடிக்கையில்
இருந்த உணர்வு
கண்ணீரா உவகையா என்றும் தெரியாது

அவதி
காதல்..

*(2006)*

•

## ஒழுங்கு

குறிப்பிட்ட நேரத்தில் வேலை
குறிப்பிட்ட நேரத்தில் உறக்கம்
குறிப்பிட்ட நேரத்தில் கணினியின் முன்னமர்தல்

எல்லாம் ஒழுங்கு தவறாத இலயத்தில்
நிகழ்ந்துவிடுகின்றன

கொலைகளும்தான்.

*(2006)*

•

## குதூகலம்

இப்போது
அதிகம் குடிக்கிறேன்
வீட்டுக்கும் குறித்த
நேரத்துக்குச் சென்று சேர்ந்துவிடுவதுமில்லை

சமூகம் மீதான
கோபமே
எனது குடியென்று
யாரேனும் ஒரு கவிஞன்
எழுதியிருக்கவும் கூடும்

எனக்கு அப்படியில்லை;
கொண்டாடிக்கொண்டிருக்கின்றேன்
சமூகத்துடன் ஒன்றிவாழ முடியா
என் சுயத்தை
போதையுடன்.

*(2006)*

•

## பிரார்த்தனை

குழந்தைகள்
காணாமற் போகின்றார்கள்
கடத்தப்படுகின்றார்கள்
காவும் கொள்ளப்படுகின்றார்கள்

87களில்
கொடுமிருளாய்த் துரத்திய
சம்பவங்களில்
எனது பிரார்த்தனை
என்றுமே வளர்ந்துவிடக் கூடாது
என்பதாய் இருந்தது

இன்றும்
எத்தனை குழந்தைகள்
பாயில் மூத்திரம் பெய்தபடி
இரவுகளை வெறித்துப் பார்க்கின்றனவோ...?

*(2006)*

•

## போரின் சூத்திரங்கள்

பழுத்த இலைகள்
உதிர்ந்து விடைகொடுக்க
சாம்பர் வானக்குதிரையிலேறி
மிதக்குமென் பயணம்
மழையாக முடிவுறுகிறது
யுத்தபூமிகளில்

கந்தக வெடியையும்
இரத்தச் சகதியையும் சுமந்தபடி
ஒற்றைச்சிறகுடன் பறக்கும் வண்ணத்துப்பூச்சிகளை
தமக்கான இரையாக்குகின்றன
வட்டமிடும் வல்லூறுகள்

புறமுதுகிட்டு
பிள்ளை ஓடினானெனின்
முலையரிவேனென்ற புறநானூற்றுத் தாய்
போரை விதந்தேத்திய
கவிஞர்களின் எழுதுகோல்களை நொறுக்கி
இறந்துபோன பிள்ளைகளை
நினைவுகூர்கிறாள்
தன் முலைகளை அறுத்தெறிந்து

ஓர் அரும்பு
மலர்வதைப் போல
மரணித்தவர்களை உயிர்ப்பிக்கவும்
காற்று வீசுவதைப் போல
விழுப்புண்களை ஆற்றவும்
இயற்கையால் முடியவில்லையெனும் ஆதங்கத்தில்
பரிதி
பூமிபிளந்து
தனக்கான புதைகுழியைத் தோண்டத் தொடங்குகின்றது

அடர்ந்த காட்டில்
மூன்று நாட்களாய்ச் சாப்பிடாதலையும்
ஒரு கெரில்லாப் போராளி
புழுக்கள் மிதக்கும்
அழுக்குத் தண்ணீரை அருந்துகையில்
விழிகளில் விரியும் மக்களுக்கான கனவுகள்
பிரசவித்துவிடுகின்றன
எளிதில் தீர்க்கமுடியா
போர் குறித்த சிக்கலான சூத்திரங்களை.

*(2006)*

•

## நாககன்னி

போர் பேரலையாகி
மூர்க்கமாய் எற்றித்தள்ள
சமுத்திரங்கள் தாண்டி
பெயரறியாக் கரையடையும் ஆதிமனிதன்
புரட்டுகின்றான்
பூர்வீக நிலம் அபகரிக்கப்படும்
வரலாற்றின் பக்கங்களை

இவன்
இருப்பிழந்த வலியின்
கனந்தாங்காது துடித்த தேவதைகள்
மழைக்காலத்தில் அனுப்பிய
நாககன்னியுடன்
பகிர்ந்தும் பிணைந்தும் சிலிர்க்க
அந்நிலப்பரப்பெங்கும் மலரத் தொடங்கின
குழந்தைகள் குதூகலத்துடன்

இங்கு
வாழ்வு செழிப்பாகவும்
இயற்கை தாலாட்ட
எவருக்கும் அஞ்ச வேண்டியதில்லையெனவும்
தற்செயலாய் வந்திறங்கிய
கடற்கொள்ளையரிடம்
செய்தி கொடுத்தனுப்பினான்;
உயிருக்காய்
அலைமேல் தத்தளிக்கும்
தன் நாட்டு மக்களுக்கு.

கூட்டமாய் வந்தவர்கள்
தம் வாழ்வு
துப்பாக்கிமுனையில் தீர்மானிக்கப்பட்ட
பொழுதுகள் மறந்து
பசும்மரங்களை தீயிட்டுக் கொளுத்தி
இசைமீட்டிய பறவைகளை
நாண்பூட்டி வதைக்கவும்
தொடங்கலாயினர்

விரும்பியதைப் புனைந்து
விரும்பியதை அருந்தி
இயற்கையாய் வாழ்ந்த நாககன்னியை
வன்மத்துடன் புணரத் துடித்த
குறிகளின் வசீகரப் பேச்சில்
தன்சுயத்தையும் தொலைத்தான்
ஆதிமனிதன்

சூரியன் துணையிருக்கும் வரை
அவளை அடைதல் ஆகாதெனும்
உண்மை கசக்க
தங்களைப் போல பிறப்பால்
சாதிப்பச்சை குத்தப்படா
அவள் இழிபிறவியென
கற்பிதங்கள் இயற்றத் தொடங்கினர்
பெயர்ந்தவர்கள்

ஓர் அமாவாசையிரவில்
நாககன்னியையும்
பச்சை குத்தப்படமுடியா குழந்தைகளையும்
சாதியுருவேறியாடி
கொன்று புதைக்க
வெகுண்டெழுந்தான் ஆதவன்
விழிகள் சிவக்க

மீண்டும்
நாடற்றவர்களான இவர்களை
இனி
தேவதைகளும்
அரவணைக்கப் போவதில்லை.

(2006)

•

ஈழத்து இளம் படைப்பாளியான இளங்கோ (27) யாழ்ப்பாணம் அம்பனையில் பிறந்தவர். போர் மூர்க்கமாய் எற்றித்தள்ள உள்நாட்டிலேயே அகதியாக அலைந்து, தன் பதினாறாவது வயதில் கனடாவுக்குப் புலம்பெயர்ந்தவர். போர்க்கால அவலங்களினதும், புலம்பெயர் வாழ்வின் அலைக்கழிதல்களினதும் மௌன சாட்சியமாய் விளங்குவன இவருடைய கவிதைகள்.

மேலும் இவர் 'டிசே தமிழன்' எனும் புனைபெயருடன் பல இதழ்களிலும், இணையத்தளங்களிலும் கவிதைகள், கட்டுரைகள் மற்றும் விமர்சனங்கள் எழுதி வருகிறார். விளிம்புநிலை எழுத்தில் அக்கறை கொண்ட இவர், www.elanko.net எனும் தனக்கான வலைப்பதிவிலும் தொடர்ந்து எழுதி வருகின்றமை குறிப்பிடத்தகுந்தது.

முன் அட்டை ஓவியம்: விக்கி பிராகோ மிஷேல்
அட்டை வடிவமைப்பு: த பாபிரஸ்

அம்பனா